Registered as a NewsPaper
பொதுசன
விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-01 13-02-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை -361


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11252)

## சந்திரநேருவுக்கு தேசியத் தலைவர் பிரபாகரன் மாமனிதர் விருது வழங்கி கௌரவம்



வெலிக்கந்தையில் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு அவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாரகன் அவர்கள் மாமனிதர் என்ற உயர் தேசிய விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரமும் வருமாறு,

தமிழ் மக்களின் விடிவையும், தமிழீழ மண்ணின் விடுதலையையும் தனது வாழ்வின் அதியுன்னத இலட்சியமாக வரித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காக அயராது உழைத்த உன்னத மனிதரை தமிழர் தேசம் இன்று இழந்துவிட்டது. தமிழ் மக்களது உரிமைக்காகவும், நீதிக்காகவும் ஓயாது ஒலித்த ஒரு பெரும் குரல் இன்று அடங்கிவிட்டது. பகைவனின் மிருகத்தனமான தாக்குதலுக்கு ஒரு தமிழினப் பற்றாளர் பலியாகிவிட்டார்.

திரு. அரியநாயகம் சந்திரநேரு அவர்கள் தன்னலம் அகன்ற மனிதநேயம்மிக்க ஒரு பொதுநலவாதி, தமிழீழ மண் தந்த தலைசிறந்த ஒரு மனித உரிமை ஆர்வலர், புரட்சிகரமான ஒரு அரசியல்வாதி. அனைவரது உள்ளங்களையும் கவர்ந்து கொண்ட ஒரு உயரிய பண்பாளர். இவரது சாவு தமிழர் தேசத்திற்கு ஒரு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அம்பாறை மண்ணோடும், அந்த மண்ணின் மக்களோடும் ஒன்றியதாகவே அவரது வாழ்விருந்தது. சிங்களப் படைகளின் தமிழின அழிப்புப் போர் உச்சம்பெற்றிருந்த நாட்களிலும், போர் ஓய்வு நிலவுகின்ற இன்றைய நாட்களிலும் அந்த மண்ணோடும், அந்த மக்களோடும் இணைந்து நின்று, அனைத்துக்கும் முகம்கொடுத்தார். சிங்களப் படைகள் அம்பாறை மண்ணில் புரிந்த அழிவு (12ஆம் பக்கம் பார்க்க)

# குடா நாட்டில் பூரண ஹர்த்தால்

# வவுனியாவில் மாபெரும் பேரணி

## இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிப்பு

**மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் மற்றும் போராளிகள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்து நேற்று யாழ். குடாநாட்டில் பூரண ஹர்த்தாலும், வவுனியாவில் கண்டனப் பேரணியும், இடம்பெற்றன. இவற்றின் காரணமாக இப்பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணத்தில் வடபிராந் திய போக்குவரத்துச் சபையினதோ, தனியாரினதோ பேருந்துகள் எவையும் சேவை யில் ஈடுபட்டிருக்கவில்லை. அரச திணைக்களங்கள், கூட்டுத்தாப னங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், கல்விக்கூடங் (12ஆம்பக்கம் பார்க்க)


வவுனியாவில்...


யாழ்.இல்.....

## மன்னார் சமாதானச் செயலகம் மீது கைக்குண்டு வீச்சு; ஒருவர் பலி!

(மன்னார்)

நேற்று மாலை 7.45 மணியளவில் மன்னார் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்திக்கு பச்சை நிற ஆட்டோவில் வந்த இனந்தெரியாத நபர்களால் கைக் குண்டு வீசப்பட்டுள்ளது. இதிலே மூன்று பேர் காயமடைந்து மன்னார் பொது வைத்திய சாலையிலே அனுமதிக்கப்பட்டனர். இதிலே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செபஸ்ரியாம்பிள்ளை வெனிஸ்போல்(வயது 23), நாகசாமி விஜயன்(வயது 40), ஞானப்பிரகாசம் கனிஸ்டர் சீலன் றோஸ் (வயது 23), ஆகிய மூவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காததால் ஞாகனிஸ்டர் சீலன் றோஸ் என்பவர் (12ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கட்டிச்சோலையில் தமிழ்ச்செல்வன் - அகாசி சந்திப்பு

### வடக்கு-கிழக்கிற்கு உதவியளிக்க ஜப்பான் உறுதியுடன் முன்வர வேண்டும்!

*அகாசியிடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை*

சுனாமியால் எங்களுடைய மக்கள் ஒரு பேரழிவைச் சந்தித்து நிற்கின்றார்கள். எங்களுடைய மக்கள் சந்தித்துள்ள அழிவிலிருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் பாரிய உதவி தேவை. அவ் உதவிகள் இலங்கை அரசாங்கத்தினூடாக நிச்சயமாக எங்களுடைய மக்களுக்கு வந்தடையாது. ஆகவே சர்வதேச சமூகத்தின் உதவிகள் வடகிழக்கிற்கு நேரடியாக உதவக்கூடிய வழிமுறைகளூடாக கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு ஜப்பான் அரசாங்கம் முழு அளவில் உறுதிப்பாட்டுடன் செயற்பட வேண்டும். எங்களுடைய மக்களுடைய மீள் கட்டுமான மனிதாபிமானப் (12ஆம் பக்கம் பார்க்க)



### கௌசல்யனின் படுகொலை சகலருக்கும் அதிர்ச்சி தரத்தக்கது

*ஜப்பான் விசேட தூதுவர் யசுசி அகாசி*

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டமை சகலருக்கும் அதிர்ச்சி தரக்கூடியது என ஜப்பானிய விசேட பிரதிநிதி யசுசி அகாசி நேற்று மட்டக்களப்பில் தெரிவித்துள்ளார்.

புலிகளுடனான சந்திப்பின் பின்பு செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், இவ்வாறான படுகொலைச் சம்பவங்கள் போர் நிறுத்த உடன்படிக்கையின் சூழ்நிலையைப் பாதிக்கும். மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான அரசியல் கொலைகள் இடம்பெற (12ஆம் பக்கம் பார்க்க)

## வண்ணனன் மின் ஒட்டும் தொழிலகம் ஆரம்பம்

கடந்த 26.12.2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இயங்காது இருந்த வண்ணன் மின் ஒட்டும் தொழிலகம் 11.02.2005 தொடக்கம் முல்லைத்தீவில் பழைய இடத்தில் ஒட்டுத் தொழில் நடைபெறுகின்றது என உரிமையாளர் ம.நேசன் தெரிவித்துள்ளார்

(5482)


# சிறி. அரசின் அராஜகத்தைக் கண்டித்து நாளை மறுதினம் கிளி.இல் கண்டனப் பேரணி

## மாவட்ட வெகுசன அமைப்புக்கள் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

அரசின அராஜகத்தைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றினை கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த ஏழாம்திகதி அன்று பெலநறுவையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரச படைகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளும் நாட்டுப்பற்றாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திர நேரு ஆகியோரின் கொலைகளைக்கண்டித்து கிளிநொச்சி மாவட்டம் தழுவிய கண்டனப் பேரணி ஒன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதால் இந்தக் கண்டனப் பேரணியில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றனர். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர்.

இக்கண்டனப் பேரணியானது இரண்டு பிரிவாக ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒன்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தடியிலிருந்து ஆரம்பிக்கும். அடுத்தது கிளி. கந்தசுவாமி கோவில் முன்பாக ஆரம்பிக்கும் இரு பேரணிகளும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் காரியாலயத்தில் வந்து சந்தித்தவுடன் அங்கு கண்டனக் கூட்டம் நடைபெற்று மகஜர் கையளிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (கு.சோ)

# கௌசல்யன் குழுவினர் மீதான படுகொலையைக் கண்டித்து கிளி. உதைபந்தாட்டச் சங்கம் சனாதிபதிக்குக் கடிதம்

கடந்த ஏழாம்திகதி அன்று பொல நறுவை வெலிக்கந்தப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல் பணிப் போராளி கௌசல்யன் உட்பட்ட குழுவினரும முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு அவர்களும் அரச கட்டுப்பாட்டுப் பிரசேத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது சமாதான சக வாழ்வை நேசிக்கும் எல்லோரினது எதிர்பார்ப்புக் களையும், தோற்கடித்துள்ளது. எனவே சமாதானத்தின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்துள்ள இச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக கிளிநொச்சி மாவட்ட உதைப்பபந்தாட்டச் சங்கம் தெரிவித்துள்ளது.

சனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சமாதான முயற்சிகள் வெற்றிக் காகவும், இன உறவுகளின் ஐக்கிய மேம்பாட்டிற்காகவும், அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்தவேளை கௌசல்யனின் படுகொலைச் சம்பவமானது "உரிமைகளுடன் கூடிய சமாதானத் தீர்வு" என்பது குறித்த தங்களின் அரசியல் எண்ணப்பாடு குறித்து தமிழ் மக்களின் மனங்களில் கேள்விகளை உண்டு பண்ணியுள்ளது மட்டுமன்றி தமிழ் மக்களின் உயிர் வாழ்வுரிமையின் பாதுகாப்புக் குறித்த அரசின் இரட்டை முகத் தன்மையை மீண்டும் ஒரு முறை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப் படுத்தியுள்ளது.

இத்தகைய நிலையை அரசு தொடருமானால் நாடு தழுவிய ரீதியில் எமது சங்கத்தின் பலத்தையும், வளத்தையும் பயன் படுத்தி அரசின் திட்டமிட்ட சதி முயற்சிகளுக்கு எதிராக சன நாயக எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்படும்.

எனவே அரசாங்கத்தினது தலைவர் என்ற வகையில் அனைத்து இனங்களினதுமுடைய அடிப்படை வாழ்வுரிமையை உத்தரவாதப்படுத்துவதற்குத் தங்களின் நடவடிக்கை பயன்பட வேண்டும் என எதிர் பார்க்கின்றோம் என அந்தக் கடிதத்தில் கேட்கப் பட்டுள்ளது. (சோ)

### தவறவிடப்பட்டது

பளை என்ற முகவரியுடன் இலக்கம் **700442950V** எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், வன்னிக்குள் செல்வதற்கான நிரந்திர அனுமதி அட்டையும் கடந்த சில தினங்களுக்கு முன்னால் சாவகச் சேரிக்கும் மிருசுவிலுக்கும் இடையில் தவறியுள்ளதால் இதைக்கண்டெடுத்தவர்கள் மிருசுவிலிலுள்ள மோகன் தேனீக்கடையில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றனர். (சன்மானம் வழங்கப்படும்)

(சி .11422)

கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்

## அறிவித்தல்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கல்வியாண்டு 2004/2005 இற்கு (2004 A/L). பதிவு செய்த கலைப்பீட முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வுகள், (Orientation Programme) 14.02.2005 காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

புதிய மாணவர்கள் அனைவரும் அன்றையதினம் காலை 8.45 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஒன்று கூடுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

இரண்டாம் வருட கலை மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான முதலாம் வருடத்திற்குரிய கணனிக் கற்கை நெறி வகுப்புகள் 21.03.2005 திங்கள் ஆரம்பமாகும்.

கலைப்பீடத்தின் ஏனைய சிரேஷ்ட் மாணவர்களுக்கான அனைத்து விரிவுரைகளும் இராமநாதன் நுண்கலைகழக (முதலாம் வருடம் உட்பட) அனைத்து மாணவர்களுக்கான விரிவுரைகளும் 01.03.2005 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும். மேலதிக விபரங்களைக் கலைப்பீட அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடவும்.

துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்.

(சி.11331)

## அறிவித்தல்

வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூ.சங்கம் பரந்தன், கிளிநொச்சி.

### பதவி வெற்றிடம் ( தற்காலிகம் )

வடபிராந்திய பாரவூர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 2005-02-28ஆம் நாளாகும். விண்ணப்பப்படிவங்கள் காரி யா லயத்தில் வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| பதவி | | வெற்றிடம். |
|---|---|---|
| 01. சாரதி (உழு பொறி பெட்டியுடன்)ரக்ரர் | - | 06 |
| சாரதி ( கனரக வாகனம், பேருந்து, பாரவூர்தி ) | - | 05 |
| 02. அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் (தமிழ், ஆங்கிலம், சிங்களம் மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராகவும், மொழிபெயர்ப்புச் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும், | - | 01 |
| 03. காவலாளி (8ஆம் வகுப்பு சித்தி ) | - | 03 |

சம்பளம் :- அவரவர்களின் தகுதிக்கேற்ப நேரில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும்

**குறிப்பு** :- (சாரதி:- தமிழீழ போக்குவரவுக் கழக உரிமம், சிறிலங்கா போக்குவரத்து ஆணையாளரின் உரிமம் என்பன வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் சிங்களம் பேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

இவ்வண்ணம்
பொதுமுகாமையாளர்.
வ.பி.பா.ஊ.உ.கூ.சங்கம்
பரந்தன்

( சி.11330 )


## விற்பனைக்கு உண்டு

உடல் வலுவூட்டும் நிலையத் திற்குரிய "GYM" உபகரணங்கள் வெயிட்செற் உட்பட விற்பனைக்கு உண்டு. முழுவதையும் ஒரே தடவையில் கொள்வனவு செய்வது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-

இளங்கோ பல்பொருள் வாணிபம்
கரடிப்போக்கு.

கிளிநொச்சி - 021-2285748

(5724)

## கலையரசி நகைமாடம்

### முல்லைத்தீவில் பழைய இடத்தில் ஆரம்பம்

சுனாமி அனர்த்ததினால் இதுவரை காலமும் இயங்காது இருந்த கலையரசி நகைமாடம் எதிர்வரும் 14.02.2005 அன்று மீண்டும் முல்லைத்தீவில் புதுப் பொலிவுடன் ஆரம்பமாகின்றது என அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றார்

உரிமையாளர்:- திரு. அறிவழகன்.

(சி.11423)

# பாகிஸ்தானில் தொடர்ந்து பெய்யும் கன மழை

## 150 பேருக்கு மேல் பலி; போக்குவரத்து ஸ்தம்பிதம்



பாகிஸ்தான் பலூசிஸ்தானில் ஏற்பட்ட கனமழையால் வீதியை ஊடறுத்துப் பாயும் வெள்ளத்தை பார்வையிடும் கிராம வாசிகள்.

(குவட்டா)

பாகிஸ்தானில் கடந்த ஒரு வாரமாக கன மழை பெய்து வருகிறது. தென் மேற்கு பகுதியில் உள்ள பலுசிஸ்தான் மாகாணம் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள சாதிகோர் அணை உடைந்து தண்ணீர் வெளியேறியத்தில் பாஸ்னி நகரம் பாதிக்கப்பட்டது.

பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. அணைத் தண்ணீர் வெளியேறிய பகுதிகளில் 35 மீற்றர் அடி உயரத்திற்கும், 300 மீற்றர் அகலத்திற்கும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதில் சிக்கிப் பலியானவர்களில் 60 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நூற்றுக் கணக்கானோரைக் காணவில்லை. அவர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இருப்பார்கள் என்று அஞ்சப் படுகின்றது. மொத்தமாக மழைக்கு பாகிஸ்தானில் பலியானோரின் எண்ணிக்கை 150-ஐ தாண்டி விட்டது. 20 ஆயிரம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். மீட்பு பணியில் இராணுவம், துணை இராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த நான்காயிரம் பேர் ஈடுபட்டு இருக்கின்றார்கள். 11 உலங்கு வானூர்திகளும் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கின்றது.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள 3 மிகப் பெரிய பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. இதனால் படகுகளில் சென்று மீட்புப் பணி நடக்கிறது.

பாகிஸ்தானில் கடந்த 16 வருடத்திற்கு பிறகு முதல் முறையாக அதிகளவு மழை பெய்திருக்கின்றது. இதனால் இமாலாயா, காரகோரா, இந்துகுஷ் மலைப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. சீனாவில் இருந்து வரும் விமானப் போக்குவரத்தும் முற்றிலுமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளது.




பாகிஸ்தானில் காதலர் தினம் கொண்டாட இஸ்லாமிய மதத் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். க்டும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் லாகூரில் காதலர் தினம் களை கட்டியுள்ளது. பரிசுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் இளம் பெண்ணொருவர் காதலர் தினத்துக்காக குவிந்துள்ள பரிசுப் பொருட்களை தேர்வு செய்கிறார்

# வெளிநாட்டவர் அமெரிக்காவில் குடியேறுவது கடினமாகிறது; புதிய சட்டம் நிறைவேறியது

(வோஷிங்டன்)

வெளிநாட்டினர் அமெரிக்காவில் குடியேறுவதைக் கடினமாக்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அமெரிக்கா மீது கடந்த 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதைச் செய்த அனைவரும் அரபு நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இதைத்தொடர்ந்து வெளிநாட்டினர் அமெரிக்காவில் குடியேறுவதைக் கடினமாக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. புதிய சட்டம் 261 பேர் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. 161 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் எதிர்த்தனர்.

இந்தப் புதிய சட்டத்தின்படி சட்டத்துக்குப் புறம்பாக குடியேறியவர்களுக்கு ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் வழங்கத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

த்விரவாதிகள் என்று சந்தேகிப்பவர்ளை நாடு கடத்துவது இப்போது எளிமைப்படுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாட்டினர் எளிதில் அமெரிக்காவில் குடியேறிவிட முடியாதபடி சட்டம் கடுமையாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்துக்கு மனித உரிமைக் குழுவினர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.



சுனாமி பாதிப்பிற்குள்ளான அஷே மாநில சிறுவன் ஒருவன் ஜப்பானிய வைத்தியர் ஒருவரிடமிருந்து மருந் துக் குளிகையைப் பெறுகிறார்.

# கோவையில் திடீர் தீ விபத்து நால்வர் உடல்கருகி பலி

(சென்னை)

தமிழ் நாடு கோவையில் வீடொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உடல் கருகிப் பலியாகினர். அதேகுடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயங்களிற்குள்ளாகினர்.



நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது வீட்டில் இருந்த தாய் இரு மகன்கள் மற்றும் நான்கு மகள்களுடன் இரவு நேரம் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தபோது திடீரென தீ பரவி வீட்டைச் சூழ்ந்து கொண்டது.

இக்கொடூரம் நடை பெறுவதை அறியாதவர்களாய் நித்திரையில் இருந்த தாய் உட்பட 4 பேர் உடல் கருகி அவ்விடத்திலேயே பலியாகினர். இடைநடுவில் விழித்துக் கொண்ட ஏனைய மூவரும் படுகாயங்களுடன் தப்பித்துக் கொண்டனர். இத் தீவிபத்துக்கான காரணம் பற்றி இதுவரை அறியப்படவில்லை.

# 70 அகதிகளுக்கு மரண தண்டனை

கம்யூனிஸ் ஆட்சி நடக்கும் வடகொரியாவில் அடக்கு முறை அதிகம், வசதிகள் குறைவு, இதனால் வடகொரியர்கள் அந்த நாட்டை விட்டுத்தப்பி ஓடி தென் கொரியா, சீனா ஆகிய நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுகின்றார்கள். சீனா இவர்களை அகதிகளாக கருதாமல் சட்ட விரோதமாக குடியேறியவர் களாகக் கருதி அவர்களை கைதுசெய்து சிறையில் போடுகிறது. அல்லது திருப்பி அனுப்புகிறது. 70 அகதிகள் வட கொரியாவுக்குத் திருப்பி அனுப்பட்டனர். அவர்களை அந்த நாட்டு அரசு பொது மக்கள் முன்னிலையில் தூக்கிலிட்டது.

சீனாவில் மட்டும் மூன்று லட்சம் வடகொரியர்கள் தலைமறைவாக வசிக்கிறார்கள்.

# சிறையில் கலவரம் மூன்று சிறை அதிகாரிகள் பலி

ஆர்ஜென்டினா நாட்டில் கோர்டேபோ நகர் உள்ளது. இது அந்த நாட்டில் இரண்டாவது மிகப் பெரிய நகராகும். இங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டு இருக்கும் கைதிகளை பார்ப்பதற்கு உறவினர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அப்போது அதிகமானோர் வந்ததால் சிறையில் கலவரம் வெடித்தது.



சிறைத்துறை அதிகாரிகளை கத்தி மற்றும் துப்பாக்கி முனையில் கைதிகள் சிறை பிடித்தனர். இது தொடர்பாக ஏற்பட்ட மோதலில் ஐந்து கைதிகள், மூன்று சிறை அதிகாரிகள் கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தக் கலவரத்தைப் பயன்படுத்தி 20 கைதிகள் தப்பியோடிவிட்டனர்.



மகாவலிபுரத்தில் சுனாமி மீட்புப் பணியில் ஈடுபட்டோர் மணலில் புதைந்து கிடந்த வெண்கல புத்தர் சிலை ஒன்றை மீட்டனர். இந்தச் சிலை தாய்லாந்து நாட்டில் இருந்து மூங்கில் கூடை மூலம் 'சுனாமி' அலைகள் அடித்து கொண்டு வந்துள்ளது. இதே போல் கிரானைட் கல்லினால் ஆன 2 சிங்க சிலைகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

# அமெரிக்க ராஜாங்க திணைக்கள உயர் பதவிக்கு பென்ட் நிக்கசஸ்

## புஷ் நியமித்தார்

(வோஷிங்டன்)

அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் உயர் மட்ட பதவிக்கு நேட்டோவிற்கான அமெரிக்கத் தூதுவர்நிக்கசஸ் பென்டை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நியமித்துள்ளார்.

இவர் முன்னர் கிரேக்கத் தூதுவராக இருந்ததுடன் ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளராகவும், கடமையாற்றியுள்ளார். அவர் அரசியல் விவகார உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதே வேளை இராஜாங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆலோசகராக தற்போது கடமையாற்றும் ஜோர்ன் இத் திணைக்களத்தின் சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். எகிப்திற்கான அமெரிக்கத் தூதுவர் டேவிட் அண்மைய கிழக்கு நாடுகள் விவகார உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# புஷ்சின் மனைவி லாறா வருத்தம்

சவுதிஅரேபியாவில் நகர சபைத் தேர்தல் நடந்தது. இதில் கலந்து கொண்டு வாக்களிப்பதற்கு ஆண்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது. பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. இதற்கு அமெரிக்க சனாதிபதி புஷ்சின் மனைவி லாறா வருத்தம் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஒரு பேட்டியில் லாறா கூறிய போது, நகர சபைத் தேர்தலில் பெண்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப் படாதது வருத்தத்துக்கு உரியது. ஆனால் அதே நேரத்தில் சவுதி அரேபியா நகரசபைத் தேர்தலை நடத்தியது பாராட்டுவதற்குரியது.

-சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து திருமலை வந்த-

# கிரேக்க மிதக்கும் வைத்தியசாலைக் கப்பல்

# படையினரின் கடும் நிபந்தனைகளுடன் சேவை!

(திருமலை)

**கடற்கோளினால் பாதிக்கப்பட்ட திருமலை மக்களுக்கு வைத்திய சேவையை வழங்குவதற்காக கடந்த 05 ஆம் திகதி திருகோணமலை வந்த கிரேக்க அரசாங்கத்தின் மிதக்கும் வைத்தியசாலைக்கப்பல் நேற்று சனிக்கிழமைகாலை தொடக்கம் கடற் படையினர் விதித்துள்ள கடுமையான நிபந் தனைகளுக்குட்பட்டு தனது வைத் திய சேவையை ஆரம்பித்துள்ளதென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரி வித்தன.**

திருமலை அரச பொது வைத்தியசாலையிலிருந்து ஒரு தடவையில் 25 நோயாளர்களை மாத்திரமே கப்பல் தரித்துள்ள இறங்கு துறைக்குக் கப்பல் நிர்வாகம் கூட்டிச் செல்ல வேண்டும் என்றும், இறங்குதுறையில் அமைக் கப்படும் விசேட தங்குமிடத்தில் இந்நோயாளர்கள் தங்க வைக்கப்படவேண்டும் என்றும் அவர்களில் ஒரு தடவை யில் ஆறு பேர் மாத்திரமே வைத்திய சிகிச்சை பெறு வதற்கு கப்பலுக்குள் அனுமதிக்கப்படவேண்டும் என் றும் கடற்படையினர் நிபந்தனை விதித்துள்ளனர் என்றும் அவ்வட்டாரங்கள் கூறின. இதன்படி நேற்று சனிக்கிழமை காலை திருமலை பொது வைத்தியசாலையில் இருந்து



முதலாவது தொகுதி நோயாளர்களை மிதக்கும் வைத்திய சாலைக் கப்பல் நிர்வாகம் பஸ் ஒன்றில் ஏற்றி அஷ்ரப் இறங்குதுறைக்கு கூட்டிச்சென்றது எனவும் தெரிவிக் கப்பட்டது. (25)

## கண்டாவளை மகாவித்தியாலயத்தில் நாளை மாவீரர் நினைவாலயம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் மாவீரர் நினைவாலயத்திறப்பு விழா நாளை 14ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலய முன்ற லில் அன்றையதினம் காலை 9.00 மணிக்கு மேற்படி மாவீரர் நினைவாலயத் திறப்பு விழா இடம் பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## புத்தகச் சீட்டிழுப்பில் மோசடி; காவல்துறையினர் விசாரணை

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதிப்பகுதியில் குலுக்கல் முறையி லான புத்தகச் சீட்டிழுப்பில் முறைகேடுகள் நிகழ்ந் துள்ளமை தெரியவந்துள்ளது.

வாராவாரம் நடைபெறும் சீட்டிழுப்பில் தெரிவு செய்யப் படும் சீட்டாளரிற்கு உடனடியாக முழுத் தொகையும் வழங் கப்படும் பின்னர் அச்சீட்டாளர் எந்த வித பணச் செலுத்து கைகளையும் செய்ய வேண்டியதில்லை. வட்டக்கச்சி பிர தேசத்தின் இவ்வகை சீட்டிழுப்பிற்கு மக்கள் மத்தியில் பலத்த ஆதரவு இருந்து வந்தது.

இதேவேளை வட்டக்கச்சி பகுதியில் சீட்டு ஒன்றினை செயற்படுத்தி வந்த நபரொருவர் ஒரே இலக்கங்களை பல தடவையும் சீட்டி ழுப்பில் சேர்த்துள்ளமை தெரியவந்துள்ளதுடன் இது தொடர் பான விசாரணைகளை வட்டக்கச்சி காவல் பணிமனை யினர் மேற்கொண்டிருந்தனர். இது தொடர்பாக வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பாளர் கி.கிங்ஸ்லிதாஸ் அவர் கள் இதுவொரு சுயநலன் கருதிய செயற்பாடு எனத் தெரி வித்துள்ளார். (15)

# வவுனியாவில் வேகமாகப் பரவிவரும் வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல்!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் வேகமாகப் பரவி வருவ தாக வ்வுனியா மாவட்ட சுகாதார பணிமனை அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.


கடந்த வாரம் மட்டும் இந் நோய் களினால் நூற்றுக் கணக்கானவர் கள் பாதிக்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையிலும், பிரதேச வைத்திய சாலைகளிலும் சிகிச்சை பெற்றுள்ளனர். வேக மாகப் பரவிவரும் இந்நோயின் தாக்கத்தில் இருந்து தம்மைப் பாது காக்க பொதுமக்கள் பின்வரும் சுகாதார நடை முறைகளைப் பின் பற்றுமாறு அவ் அதிகாரிகள் கோரி உள்ளனர். கொதித்தாறிய நீரைப் பருகவும், சாப்பிட முன்பும் மலங் கழித்த பின்பும் கைகளை சவர்க் காரம் இட்டு நன்றாகக் கழுவவும், உணவுகளை சூடாக உண்ணவும், மூடாது இருக்கும் உணவுகளை யும், சூடாக்காத உணவுகளையும் உண்பதைத் தவிர்க்கவும், மரக்கறி களை பச்சையாக உண்பதை தற் போது தவிர்க்கவும்.

வவுனியா நகரில் உள்ள பல உணவகங்களில் மேற்கொள்ளப் பட்ட சுகாதார பரிசோதனைகளின் போது அவற்றில் சுகாதார மற்ற முறையில் உணவுவகைகள் தயாரிக் கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டு அவ் உணவகங்கள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் உணவகங்களில் உண்வு உண்பதை தவிர்கருமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றனர். (10)

## கால்நடைப் பண்ணையாளருக்கு பூநகரியில் பயிற்சி வகுப்பு

(கிளிநொச்சி)

கிளி. பூநகரி பிரதேசத்திற்கு உட்பட்ட அனைத்து கால் நடை சம்பந்தமான கானொலி நாடா படக்காட்சியும் பயிற்சி வகுப்பும் நடை பெறவுள்ளது குமுழமுனை பொது நோக்கு மண்டபத்தில் எதிர்வரும் 17.02.2005 (வியாழக்கிழமை ) பிற்பகல் 5மணிக்கு செயற்கை முறைச் சினைப்படுத்தல் கால்நடைவளர்ப்பு என்பன தொடர்பான பயிற்சி வகுப்பு கானொலி நாடாபடக்காட்சியும் கால்நடை வைத்தியர் அலுவலர், கால்நடை அபிவிருத்தி அலுவலர் ஆகியோரால் நடாத்தப் படவுள்ளதால் இந்நிகழ்வுக்கு கமக்கார அமைப்புக்கள் கால்நடை வளர்ப்போர் உட்பட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கால்நடை வைத்தியர் செ.கௌரிதிலகன் கேட்டுக் கொள்கிறார் (15)



கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் கடந்த வருடம் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடவேலைகள் இதுவரை பூர்த்தியாகாத நிலையில் உள்ளதனால் மேற்படி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 400 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தற்போதும் பாடசாலையில் உள்ள கீற்றுக்கொட்டகைகளிலிருந்தே கல்வியினைத் தொடரவேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். மேற்படி பாடசாலையில் பூரணப்படுத்தப்படாத நிலையிலுள்ள இரு மாடிக் கட்டடத்தினைப் படத்தில் காண்க. (படம்:- சோதி)

-நலன்புரி நிலைய மக்களுக்கான-

## உலருணவுப் பொருட்களைக் கடத்திய மூவர் வவுனியா பொலிசாரால் கைது

(வவுனியா செய்தியாளர்)

பூந்தோட்டம் நலன்புரி நிலைய மக்களுக்கான உலருணவுப் பொருட்களை கடத்திய மூவர் வவுனியா பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.கடந்த திங் கட்கிழமை பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளையில் இருந்து நான்கு மூடைசீனி, பத்து மூடை அரிசி ஆகிய உலருணவுப் பொருட்களை வவுனியா பல நோக்கு கூட்டுறவுச்சங்க பார ஊர் தியில் கடத்திக் கொண்டு செல லும் போதே இம்மூவர் பொலி சாரால் கைது செய்யப்பட்டுள் ளனர். நலன்புரி நிலைய மக்க ளுக்கான உலருணவுப் பொருட் கள் கடத்திக் கொண்டு செல்லப் படுவதாக பூந்தோட்டம் நலன்புரி நிலைய மக்கள் பொலிசாருக்கு கொடுத்த தகவலின் அடிப்படை யில் வவுனியா பல நோக்கு கூட்டு றவுச்சங்க பாரஊர்தியை பொலி சார் வழிமறித்து சோதனை இட்டபோதே இப்பொருட்களை கடத்திக் கொண்டு சென்ற வவு னியா பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தின் பூந்தோட்டம் நலன்புரி நிலை யக்கிளை முகாமையாளர், பார ஊர்தி சாரதி, உதவியாளர் ஆகிய மூவரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (10)

## கசிப்பு உற்பத்தியுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் நீதிமன்றில் சரண்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி காவல்பணி மனையினரால் மேற்கொள்ளப் பட்ட குற்றத்தடுப்பு நடவடிக்கை யின் சந்தேகநபர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் சரணடைந் துள்ளனர்.

இராமநாதபுரம் சிறியசந்தைப் பகுதியில் ஒரு லீற்றர் கசிப்பு வட்டக் கச்சி காவல் பணிமனையினரின் நடவடிக்கையால் மீட்கப்பட் டிருந்தது. இச்சம்பவத்துடன் தொடா புடைய நபர் கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றில் சரணடைந்துள்ளார்.

இதேவேளை இராமநாதபுரம் சம்புக்குளம் பகுதியில் 45 லீற்றர் கசிப்பு உட்பட கசிப்பு உற்பத்தி பொருட்களும், உற்பத்தி உபகர ணங்களும் வட்டக்கச்சி காவல் துறையினரால் மீட்கப்பட்டமை தெரிந்ததே. இச்சம்பவத்துடன் தொடர்புடைய 10 ஏக்கர்-சம்புக்குளம் என்னும் பகுதியைச் சேர்ந்த நபர் கிளி நொச்சி மாவட்ட நீதிமன்றில் சரண டைந்துள்ளார்.

வட்டக்கச்சி காவல் பணிமனை யினரால் மேற்கொள்ளப்படும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையால் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதாகவும், காவல்துறை யினரின் கசிப்பு ஒழிப்பு நடவடிக் கைக்கு மக்கள் பூரண ஒத்துழைப் பினையும் தருவதாக வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பதி காரி கி.கிங்ஸ்லிதாஸ் தெரிவித் துள்ளார். (15)

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக தண்ணீர் பௌசர்கள் அன்பளிப்பு

(வவுனியா)

ஆழிப்பேரலை அனர்த்தத்தி னால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீரைக் கொண்டு சென்று வழங்க்வென வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத் தித் திட்டத்தின் மூலம் 20 தண்ணீர் பௌசர்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டுள்ளன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தி னால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக் களின் குடிநீர்த் தேவையைப் பூர் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் இவ் இருபது தண்ணீர் பௌசர்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள தாக வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தின் வவுனியா மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் மா.கிருபாகரன் தெரி வித்துள்ளார்.

இவ் இருபது தண்ணீர் பௌசர் களும் முல்லைத்தீவு மாவட்டத்தி ற்கு பத்து, யாழ். மாவட்டத்திற்கு பத்து என பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள தாக அவர் மேலும்தெரிவித்துள் ளார். (10)

## மீன்பிடித் தொழில் மேம்பாட்டிற்கு வலைகள், உபகரணங்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 18 மீன வக் குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினரால் மீன் பிடி வலைகளும் அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் 10 மீனவக் குடும்பங்களுக்கும், அக்கராயன் பிரதேசத்தில் 8 மீனவக் குடும்பங்களுக்கும் மேற்படி வலை களும் அதற்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பெற்று ள்ளது.மேற்படி கையளிக்கும் நிகழ்வில் கிளி.மாவட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் தயாகுணரட்ணசிங்கம், கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி. சுலோஜினி யு.என்.எச்.சி.ஆர். நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் அக்கராயன் வன்னேரி கிராம சேவை அலுவலர்கள் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது. (சோ)

# உட்பூசல்களை வெளிப்படுத்தி ஆதாயம் காணும் ஜே.வி.பியினர்

**ப.துஸ்யந்தன்**


விமலவீரவன்ச
டில்வின்சில்வா

கழுவுகிற மீனில் நழுவுகிற மீன்போல் தன் அரசியல்நடவடிக்கைகளை முன் கொண்டு செல்லும் நிலையிலே ஜே.வி.பி. யினர் செயற்பட்டுவருவதனை அண்மைய நாட்களில் அவதானிக்க முடிகிறது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற சுனாமி தொடர்பான பாராளுமன்றக் கூட்டத்தொடரில் ஜே.வி.பியினரின் 39பாராளுமன்ற உறுப்பினர்களும் இக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளாததில் இருந்து அவர்களின் அரசியல் நிலைப் பாடுகளைத் தெளிவாக வெளிக்கொணர்த் திருக்கிறது..

இக்கூட்டத்தொடரை புறக்கணித்ததற்காக ஜே.வி.பி.யின் பிரசார செயலர் விமல் வீரவன்ச கூறுகின்ற காரணங் களை நோக்குகின்ற போது இப் பத்திக்கு சில ஆதாரங்களை உள்வாங்கிகொள்ள முடிகிறது.

அவையாவன:-

1. சுனாமி நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக தாம் முன்வைத்த திட்டங்களை அரசு கவனத்தில் எடுக்கவில்லை [இங்கு அரசாங்கத் தில் அங்கம் வகிக்கும்முக்கியமான கட்சி ஜே.வி.பீ. என்பது நோக்கத்தக்கது.]

2. சுனாமி நிவாரண செயற்பாட்டுக் குழுவாக அரசாங்கம் நியமித்துள்ளவர்களிற்கு எந்தவித துறைசார்ந்த தகுதியும் இல்லை.

3. ஐ.நா. செயலாளர் நாயகம் கொபிஅனான் இலங்கை வந்த போது அவரை புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குச் செல்ல விடாமல் தடுத்த அரசாங்கத்தால், அவர் கொழும்பில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை சந்தித்ததை தடுக்க முடியாமல் போனது ஏன்?

4. சுனாமி நிவாரணம் என்ற போர்வையில் புலிகளிற்கு ஆயுதங்களும் நிதிஉதவிகளும் கிடைப்பதை அரசால் தடுக்க முடியவில்லை.

இவ்வாறான அரசின் நடவடிக்கைகளால் தான் தாம் சுனாமி பற்றிய பாராளுமன்றக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளவில்லை என விமல் வீரவன்ச குறிப்பிட்டிருந்தாலும் இதன் உள்நோக்கங்கள் நிறையவே பொதிந்திருக்கிற. என்பதுதான் உண்மை.

சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஒட்டிக்கொண்டு பாராளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களை கைப்பற்றி தானும் ஒருஆளும் அரசாங்கம் என்ற நிலையில் செயற்பட்டு வந்த ஜே.வி.பி.யினர் இடையிடையே தாய்பிள்ளை சண்டைபோல் சந்திரிகாவுடன் முட்டி மோதி பின் தாம் இப்போக்நல்ல ஒட்டுறவாக இருக்கிறோம் எனக்காட்டி வந்தனர்.

இப்படிப்பட்ட உட்பூசல்களை மக்கள் மயப்படுத்துவதில் ஜே.வி.பி. யினர் சில அனுகூலங்களையும் பெற்றனர். குறிப்பாக தாம் அதிகமாக சிங்கள மக்களை நேசிக்கிறோம், பாதுகாக்கத்துடிக்கிறோம். என காட்டுவதற்காக தமிழர்களையும் புலி களையும் விமர்சித்து சிங்கள மக்களிடையே இனவாதத்தை வளர்த்து வந்தனர். இந்த நிலையில் சந்திரிகா தம்மைப்போல் இனவாதம் பேசுவது இல்லை எனவும் கோபப் பட்டுக் கொண்டனர்.

அதாவது சந்திரிகாவின் அரசியல்பலத்தில் இருந்து கொண்டே சந்திரிகாவை ஓரம்கட்டும் திட்டத்தை மெல்ல மெல்ல நடைமுறைப் படுத்தி வந்தனர்.

இது ஜே.வி.பி.யினர் கடந்த சில காலங்களாக கைக்கொண்ட வழி முறை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில்இலங்கையைத்தாக்கிய சுனாமிப் பேரலை ஜே.வி.பி. யினரின் நகர்வுகளில் சில இடையூறுகளை ஏற்படுத்தி விட்டிருந்தது.

முக்கியமாக சுனாமி தாக்கி பேரழிவை ஏற்படுத்திய பகுதிகள் தமிழர் தாயகப்பகுதிகள் தான் என்பதாலும் உலக நாடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு உதவமுன்வந்தமையால் ஜே.வி.பி. யினரிற்கு விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாத நிலையை ஏற்படுத்தியது.

சுனாமி தாக்கி பேரழிவை ஏற்படுத்திய நேரம் ஜே.வி.பி. யினரின் எந்த விதமான அறிக்கைகளோ நிவாரண உதவிமுன்னெடுப்புகளோ நடைமுறைக்கு வராமையைக் கொண்டே இவர்களின் சங்கட நிலையைப் புரிந்து கொள்ள முடிந்தது.

விமல் வீரவன்ச கூறிய பாராளுமன்ற புறக்கணிப்பிற்கான காரணங்களும் இதனையே படம்போட்டுக் காட்டுகின்றன.

உண்மையிலே ஜே.வி.பி.யினர் பாராளுமன்றத்தை புறக்கணிப்பதற்கு என்ன காரணம் என்பதை ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

முதலாவதாக கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பாராளுமன்றக் கூட்டம் சுனாமி நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக அமைந்தது என்பது;

இக்கூட்டத்தில் தாமும்கலந்து கொண்டால் பெரும் சங்கடத்தை எதிர் கொள்ள வேண்டிவரும் என்பதை உணர்ந் திருந்தனர்.

கூட்டத்தில் சுனாமி நிவாரணம் தொடர்பாக ஆதரித்து கதைப்பதென்றால் அது தமிழர் பகுதிகளை வளப்படுத்தும் நடவடிக்கையாய் அமைந்திடலாமென ஜே.வி.பி. யினர் கருதியிருக்கலாம்.

ஏனெனில் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிதமிழர் பகுதி என்பதால் அதைவிடுத்து இதைஎதிர்த்து தமிழர் பாதிப்புகளைப் புறக்கணித்து சிங்களப் பகுதி பாதிப்புகளைக் கூட்டி கதைப்பதென்றால் அங்கே ஜே.வி.பி. யின் இனவாதப் போக்கு இலங்கைக்கு மட்டுமல்ல சர்வதேசத்திற்கே தெளிவாகி விடும் அல்லது பாராளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதார பூர்வமான உரையால் தலைகுனிய வேண்டி ஏற்பட்டு விடலாம்.

மற்றையது சந்திரிகாவுடன் தாம் தற்போது ஒட்டுறவு இல்லை என்பதை தொட்டு காட்டுவதற்காகக் கூட இருக்கலாம். இவைகள் அனைத்தும் ஜே.வி.பியின் முற்கூட்டிய கணிப்பாக இருந்திருக்கலாம் இதைவிட உடனடிக் காரணங்கள் சிலவும் ஜே.வி.பியினரை பாராளுமன்ற கூட்டத் தொடரில் கலந்து கொள்ள விடாமல் செய்திருக்கலாம்.

அதாவது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாக அமைந்துவிட்ட மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட்ட 5 போராளிகளின் படு கொலைகள் சம்பந்தமான விவாதங்கள் பாராளுமன்றத்தில் சூடு பிடிக்கக்கூடும் என ஜே.வி.பி. யினர் எதிர்பார்த்திருப்பர் இந்நிலையில் தாம் எவ்வாறு பாராளுமன்றத்தில் போய் அமர்ந்திருப்பது இனவாதம் பேசிய வாய்கள் இப்படுகொலைகள் தொடர்பாக கண்டனம் தெரிவிக்கவும் முன்வராது அல்லது, கொலையை நியாயப்படுத்துவதானால் அதற்கு பாராளுமன்றத்தில் பலத்த எதிர்ப்பு கிடைக்கும் என்பதும் ஜே.வி.பி.க்கு புரிந்திருக்கக் கூடும் இந்த நிலையில் பாராளுமன்றம் சென்று ஏடா கூடாமாய் ஏதாவது உளறி வாங்கிக் கட்டுவதைவிட வெளியில் அமைதியாய் இருப்பது மேல் எனக் கருதியதால்தான் ஜே.வி.பியினர் சுனாமி தொடர்பான


சந்திரிகா

கூட்டத் தொடரை புறக்கணித்துள்ளார்கள் என்பதை ஊகிக்க முடியும். இதை உறுதிப்படுத்துமுகமாக விமல் வீரவன்ச தனது அறிக்கையில் கடைசியாய் கூறிய விடயம் "அவர்களின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறது. அதாவது "ஆயிரம் வார்த்தைகள் கூறுவதை விட அமைதியாய் இருப்பது அரசுக்கு அதிக அழுத்தங்களை கொடுக்கும்" எனத் தெரிவித்தார்.இது சந்தர்ப்பவாதப் போக்கால் ஜே.வி.பியினர் செய்யும் சுயலாப உபதேசம் என்பததை மட்டும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்

---

# யாழ்.குடாநாட்டில் பெற்றோரை இழந்து 530 சிறுவர்கள் பரிதவிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் தாய் தந்தையரை இழந்த சிறார்களின் தொகைஅதிகரித்து வருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ். .குடா நாடெங்கிலும் 530 சிறுவர்கள் தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரையும் இழந்து உறவினர் வீடுகளிலும், சிறுவர் இல்லங். களிலும் தங்கி வாழ்வதாக சிறுவர் நல அமைப்புக்களின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதைவிட தாய் மாரை இழந்த நிலையில் 3,453 சிறார்களும், தந்தை மாரை இழந்த நிலையில் 2437 சிறார்களும் தற்போது யாழ். குடாநாடெங்கிலும் வாழ்ந்து வருவதாகவும் மேலும் தெரியவருகிறது.

இவ்வாறு தாய் மற்றும் தந்தையர் தாய்தந்தை ஆகியோரை இழந்து தற்போது தங்கி வாழும் 18 வயதிற்குட்பட்ட சிறார்களில் 571 பேர் அங்கவீனர்களாகவும், 267 பேர் உளத்தாக்கங்களுக்கு குட்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப் படுகிறது. யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பெற்ற உறவுகளை இழந்த இவ்வாறான சிறார்களின் அபிவிருத்தி, நலவுரிமை மேம்பாடு குறித்து சிறிலங்கா அரசு உரிய கவனம் செலுத்துவதில்லையெனவும்பல்வேறுபட்ட சமூக நலன்பேணும் அமைப்புக்களாலும் குற்றம் சாட்டப்படுகிறது.

(33)

# கொடிகாமம் மருத்துவமனைக்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

## -அபிவிருத்திச்சபை கோரல்

(தென்மராட்சி)

கொடிகாமம் மகப்பேற்று மருத்துவமனைக்கு உரிய அடிப்படை வசதிகளை தாமதம் இன்றி செய்துதரவேண்டுமென மருத்துவமனை அபிவிருத்திச்சபை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அடுத்தபடியாக உள்ள இந்த மருத்துவமனை பல கிராமங்களை உள்ளடக்கிய பல ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் பொருட்டு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்கும் படியும் வெளிநோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெறுவதற்கும் ஏற்ற விதத்தில் மண்டப வசதிகளை உடனடியாக தற்காலிகமாக வேனும் செய்து கொடுக்கும்படியும், மலசலகூட வசதிகள் வெளிநோயாளருக்கு இல்லாமையால்வரும் நோயாளர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாவதுடன் இந்த அடிப்படைத்தேவைகளை தாமதமின்றி செய்து கொடுக்கும் படி மருத்துவமனையின் அபிவிருத்திச் சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(28)

# தமிழ் மாணவர் பேரவையில் உதவியளிக்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி இடம் பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் பதிவு செய்து உடனடி உதவிகளைப் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அடுத்தகட்ட தொடர்ச்சியான உதவிகள் வழங்கலுக்காக மாணவர் பேரவையில் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெற உள்ள கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-2223942, 021-2223768 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

(36)

# மீன் பிடியியல் கற்கை நெறிக்கான எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமாக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கான எழுத்துப்பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.30 மணி முதல் முற்பகல் 10.30 மணிவரை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை குடாநாட்டுக்கு வெளியே உள்ள மாணவர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரையும் நடைபெறும். குடா நாட்டு மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளதாகவும் யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. எல்லா விண்ணப்பதாரிகளுக்கும் கடிதம் மூலம் இவ்விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடிதம் கிடைக்கப் பெறாதவர்களையும் எழுத்துப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் சமுகமளிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி கேட்டுக்கொள்கின்றார்.

# ஜெயலலிதாவின் குறி சங்கராச்சாரியாரா? சங்கர மடமா?

அ.கலைவாணி

தமிழகத்தில் ஆன்மீகமா.....அரசியலா..... மேலோங்கி செல்வாக்குச் செலுத்துகின்றது என்று வினா எழுப்பினால் ஆன்மீகம் தான் என்று பதிலளிக்குமளவிற்கே அங்கு தற்போது நிலைமைகள் மாறி வருகின்றன.

தமிழ்க முதலமைச்சர் ஜெயலலிதா தான் எடுக்கும் அதிரடி நடவடிக்கைகளுக்கெல்லாம் சட்டம் தனது கடமையினைச் சரியாக செய்யத் தவறாது என்றே கூறிவந்தார். இந்த வகையில் தான் காஞ்சி மடத்து சங்கராச்சாரியார் முதல் இளைய பீடாதிபதி விஜயேந்திரா வரை கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால் இன்றைய நிலையில் உள்ளே சென்ற ஆன்மீகவாதிகள் இருவரும் ஒருவர் பின் ஒருவராக வெளிவந்துள்ளனர். சென்னை நீதிமன்றம் நேற்றையதினம் விஜயேந்திரரை பிணையில் செல்ல அனுமதித்துவிட்டது.

ஆன்மீக வாதிகளின் கைது விவகாரமும் விடுதலையும் தமிழகத்தில் பெரும் சர்ச்சை, விசனம், விமர்சனங்களையே ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், தமிழகப் பொலிசார் துணிந்தே சங்கரராமன் கொலைக்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக சங்கரமடத்தை முற்றுகையிட்டனர்.

உண்மையான ஆதாரங்கள் எதுவுமின்றி சங்கரமடத்தைச் சுற்றி வளைக்கவோ, சங்கராச்சாரியார், விஜயேந்திரர் உட்பட்டவர்களைக் கைது செய்வதற்கோ தமிழக அரசு முன்வந்திருக்குமா..... என்பதே மிகப் பெரிய சந்தேகமாக நிலவுகின்றது.

ஏனெனில், ஆன்மீகமும், அரசியலும் இணைபிரியாதவை என்பது பேருண்மை. அதுமட்டுமன்றி சங்கரமடத்திற்கு உலகின் மூலை முடுக்குகளிலும் கூட செல்வாக்கு இருக்கின்றது. இந்த நிலையில் சங்கர மடத்தை தமிழகப் பொலிசார் முடக்க முற்பட்டமையானது உண்மையில் சங்கரராமன் கொலைக்கும் சங்கரமடத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தமைதானா..... அல்லது வேறு ஏதும் காரணங்களா......

சங்கராச்சாரியார் விஜயேந்திரர் உட்பட்டவர்கள், சங்கரராமன் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்பதே தமிழக பொலிசாரின் வாதமாக இருக்கின்றது. ஆனால் இதுவரையும் சங்கரமடத்தினர் தான் சங்கரராமன் கொலைக்கு காரணகர்த்தாக்கள் என்பதை ஏனோ தமிழகப் பொலிசாரினால் நிரூபிக்க முடியவில்லை.

சட்டம் தனது கடமையினையே சங்கராச்சாரியார் விடயத்தில் செய்திருக்கின்றது என்று அறிக்கை வெளியிட்டவர் முதலமைச்சர் ஜெயலலிதா. ஆனால் இன்றோ ஆன்மீக வாதிகள் இருவருமே கூட நீதிமன்றங்களினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கும் போது பேசா மடந்தையாகி இருப்பதானது தமிழக அரசின் மீதே பலரது சந்தேகப் பார்வைகளையும் திரும்பவைத்திருக்கின்றது.

உண்மையில் சங்கரமடத்திற்கும் சங்கரராமன் கொலைக்கும் தொடர்பு இருக்கின்றதா..... என்பது சங்கரராமன் கொலையானது இன்றுவரை வண்டாகக்குடையும் மற்றொரு சந்தேகமாகும்.

சங்கரமடத்தினரே சங்கரராமன் கொலைக்குக் காரணம் என்பது காலங்கடந்த தமிழகப் பொலிசாரின் முடிவு. ஆரம்பத்திலேயே சங்கர மடத்தை முற்றுகையிட்டிருப்பின் தமிழக மக்கள் அனைவருமே கூட ஆன்மீகவாதிகள் மீது சந்தேகம் கொண்டிருப்பார்கள்.

ஆனால் சங்கரராமன் கொலை நடந்து முடிந்து, அது மறக்கப்பட்ட நிலையில் தமிழகப் பொலிசார் சங்கரமடத்தின் மீது நடவடிக்கை எடுத்திருப்பதை எவராலும் ஜீரணிக்க முடியவில்லை என்பதும் மறுக்க முடியாது.


இதேவேளை சங்கரராமன் கொலைக்கும் சங்கராச்சாரியார் விஜயேந்திரர் உட்பட்டவர்களே பின்னணி என்று கூறும் தமிழகப் பொலிசார் இதுவரை அதற்கான ஆதாரங்களை ஏனோ வெளிக்கொண்டு வர முடியாது திணறுகின்றார்கள்.

இதற்குக் காரணம் பல இருக்க முடியும்.




சங்கரராமன் கொலை செய்யப்பட்ட போது சங்கரமடமும் அ.தி.மு.க. அரசும் மிகவும் நெருக்க மாக இருந்தமையினால் கண்மூடி மௌனம் காத்திருக்கலாம்.

* இப்போது சங்கரமடமும் அ.தி.மு.க அரசும் இருவேறு துருவங்களாக இருப்பதனால் பழைய குப்பைகளைக்கிளற முற்பட்டிருக்கலாம்.




* ஆன்மீகத்தின் பின்னால் அரசியல் கட்சிகள் செல்வாக்கு செலுத்துகின்றமை.

இவை போன்ற காரணங் களால் கடந்த ஆண்டு நடந்த சங்கரராமன் கொலைக்கான ஆதாரங் களை இந்த ஆண்டில தேடும்போது கிடைத்து விடுமா...... அவை அழிந்து போயிருக்கலாம் அல்லது அழிக்கப்பட்டிருக்கலாம் அல்லது மறைக்கப்பட்டி ருக்கவும் கூடும்.

இல்லையேல் உண்மையில் சங்கர மடத்திற்கும் சங்கரராமனுக்கும் தொடர்புகள் இருப்பதாக தமிழகப் பொலிசார் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதாகவும் இருக்கலாம்.

எனவே தமிழகப் பொலிசார் சங்கரராமன் கொலைக்கும் சங்கரமடத்திற்குமான தொடர்பு கள் குறித்த ஆதாரங்களை வெளியே கொண்டு வராது இருக்குமளவிற்கும் அவர்கள் மீதான விமர்சனங்கள் ஓயப் போவதில்லை.

இவற்றினிடையே, இதுவரை சங்கர மடத்திற்கு சொந்தமான 183 வங்கிக் கணக்குகளை தமிழகப் பொலிசார் முடக்கி வைத்திருந்தமை தவறு என்றும் இனி அது செல்லு படியாகாது என்றும் நேற்றையதினம் சென்னை நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

அது மட்டுமன்றி சங்கரமடம் சுயாதீனமான அமைப்பு என்பதால் அதன் வங்கி கணக்குகளை முடக்குவது தவறான செய லென்றும் நீதிமன்றம் தமிழகப் பொலிசாரின் நடவடிக்கைகளை கண்டித்திருக்கின்றது.

ஆக......... சங்கரமடத்தை முடக்குவதற்கு தமிழகப் பொலிசார் இதுவரை வைத்த ஒவ்வொரு சுருக்கு தடமும் நாளாந்தம் அவர்களுக்கே வினையாகி முடிந்திருக்கிறது.

இல்லையேல், நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் தமிழக அரசிற்கும், பொலிசாரிற்கும் எதிராக திருப்பப்பட்டிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்க மாட்டாது.

தற்போது தமிழக அரசு திண்டாடுவதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன எனலாம்.

தமிழகத்தில் அ.தி.மு.க வுடன் வலிந்து கூட்டணி அமைத்துக் கொண்ட பாரதிய ஜனதா கட்சியோ இன்று அதி.மு.க. என்றாலே முகத்தை எட்டு கோணலாக சுழிக்கின்றது. அதுமட்டுமன்றி பாரதிய ஜனதா சங்கர மடத்துடன் நெருக்கமான உறவுகளை காலம் காலமாக பேணி வருவதனால் தமிழக பொலிசாரின் நடவடிக்கைக்கு பச்சைக் கொடி காட்ட அக்கட்சி தயாராக இல்லை.

இதேபோன்று மத்தியில் இருக்கும் ஐக்கிய முற்போக்கு அரசும் சங்கரமடத்திற்கு எதிராக கைதூக்குவதற்கு தயாராக இல்லை என்றே தெரிகின்றது. அதனால் தான் சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்ட போது. பிரதமர் மன்மோகன் சிங், ஆன்மீகவாதி கடுமையாக நடத்தப்படக் கூடாது என்று கேட்டிருந்தார்.

அதுமட்டுமன்றி விஜயேந்திரரை கைது செய்ய வேண்டாம் என்றும் தமிழக அர சிற்கு எச்சரிக்கை செய்திருந்தார். ஆனால் தமிழக அரசோ எதனையுமே கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

இதனால் மத்தியரசின் கோபத் திற்கு தமிழக அரசு இலக் காகிவிட்டதாக பரபரப் பாகப் பேசப்பட்டது. ஆனால் மத்தியரசோ மௌனமாக இருந்தமை ஏன்..... என்பதும் சந்தேகம்தான்!

இன்றைய நிலையில் தமிழகரசு தோற்றுப் போய் விட்டது என்று தான் கூற வேண்டும். மத்தியரசின் சொல்லிற்கு கட்டுப்படாது செயற்பட்டமையினால் நிச்சயம் தமிழக அரசிற்கும் மத்தியர சிற்குமிடையே இடைவெளி அதிகரிக்கவே சாத்தியமுண்டு.




இதேவேளை தமிழக அரசு ஏற்கனவே கும்பகோணத் திலுள்ள வீரசைவமடத்தை தமது வசம் கொண்டு வந்துள்ளது.

இதேபோன்றே சங்கர மடத்தையும் முடக்கப் போவதாகவும் தமது கட்டுப்பாட்டிற்குள் ஆளப் போவதாகவும் சங்கரமடத்தினர் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனை உண்மையாக்குவது போலவே தான், சங்கரமடத்தை தமிழக அரசே பொறுப்பேற்கவுள்ளதாக சட்டசபையில் தமிழக அரசு சட்டம் கொண்டு வந்திருக்கின்றது.

எனவே அங்கு சுற்றி, இங்கு சுற்றி தமிழகப் பொலிசார் சங்கரமடத்தை முற்றுகையிட்டதெல்லாம் ஏன்...... என்பதற்கு கூட விடை தெரிந்து விட்டது எனலாம்.

இல்லையேல் சங்கரராமன் கொலைக்கு ஆதாரம் தேடிப் போன தமிழகப் பொலிசார், சங்கரமடத்தையே ஆளநினைப்பது என்பது பொருத்தப்பாடுடையதாக இருக்கமுடியாது.

இதேவேளை நாளுக்கு நாள் தமிழகத்தில் ஆன்மீகத்தின் செல்வாக்கு அதிகரித்து வருவதனால், மிகவிரைவில் சங்கரமடத்தை தமது பொறுப்பில் ஏற்க முற்படும் தமிழக அரசின் புதிய சட்டம் செயலிழந்து காணாமல் கூடப் போக நேரிடலாம்.

இவையனைத்தும் தமிழக அரசினை விமர்சனத்திற்கே இட்டுச் செல்லவுள்ள நிலையில், தமிழகரசு இவற்றிலிருந்து நிச்சயம் மீண்டிடாத வரை ஜெயலலிதா மீட்சியை எட்டுவது இயலாத காரியம் எனலாம்.

ஏனெனில் மிகவிரைவில் சட்டமன்றத் தேர்தலை நடத்தி முடித்துவிட வேண்டுமெனும் எத்தனிப்பிலுள்ள தமிழக முதலமைச்சருக்கு சங்கரமடம் நிச்சயம் தலைவலியைக் கொடுக்காமல் இருக்கமாட்டாது.

அதாவது ஆன்மீக வாதிகளின் மீது கை வைத்தது மட்டுமன்றி அவர்களது குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாமல் திணறுவது கூட, சட்டமன்றத் தேர்தலில் செல்வாக்குச செலுத்தும் காரணிகள் தான்!

ஏனெனில் சங்கரமடத்து சங்கராச்சாரியாரைக் கைது செய்ததே திமுக. ஸ்டாலினை வளைக்கவே என்றே அப்போது பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

எனவே நிச்சயம் தி.மு.க.வினர் சங்கர மடத்து விவகாரத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தவே எத்தனிப்பார்கள் என்பதில் அச்சமில்லை.

அதாவது ஏற்கனவே சொத்துக் குவிப்பு வழக்கில் விழி பிதுங்கும் தமிழக முதலமைச்சருக்கு, சங்கரமடத்து சொத்தும் தேவைப்படுகின்றது..... என்று தி.மு.க பிரச்சாரத்தில் இறங்காமல் இருக்கப் போவதில்லை.

எனவே சட்டத்தை கையி லெடுத்து, சட்ட சபைத் தேர்தலில் வாக்கு வங்கிகளை நிரப்புவதற்கு தமிழக முதலமைச்சர் நினைத்திருந்தால் அது நிச்சயம் வெற்றியைப் பெற்றுக் கொடுக்கப் போவதில்லை.

அதுமட்டுமன்றி தமிழகத்தில் நாளுக்கு நாள் ஆன்மீகத்தைக் காட்டி போலிச் சாமியார்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது பரபரப்பாக ஊடகங்கள் வெளியிடும் தகவல்கள்.

எனவே அவர்களையெல்லாம் விட்டு விட்டு அரசியல் பின்புலத்தோடு இயங்கும் சங்கரமடத்தை தமிழகரசு தம்வசப்படுத்த நினைத்தமையானது ஏன்..... என்பதும் சந்தேக வினாதான்.



இருந்த போதும் சங்கரமடத்து விவகார புதிர்விடுவிக்கப்படாதவரை, தமிழகரசு மீதான அவப்பெயரும் நீங்கப் போவதில்லை என்பதே உண்மையாகும் என்றால் மிகையில்லை.

✡

யாழ்ப்பாணம்

# கனக்க மீன்கள் பிடிபட்ட சந்தோசத்தோடவர மூத்தவள் கரையில் சடலமாய் கிடந்தாள்

*சுனாமி அலைகள் முல்லைத்தீவை முரட்டுத்தனமாக தாக்கிய சமயம் முல்லைக் கரையில் இருந்து ஆறு மையில் தூரத்துக்கப்பால் நின்று தொழில் செய்து என்றுமில்லாதவாறு அதிகளவான மீன்கள் பிடிபட்ட மகிழ்வில் கரை திரும்பிக் கொண்டிருந்த சமயம் கரையை காணாது திண்டாடி ஒருவாறு கரையை அடைந்து தனது குடும்ப உறுப்பினர்களை சடலமாகக் கண்ட சம்பவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை பகிர்ந்து கொள்கிறார் கள்ளப்பாட்டைச் சேர்ந்த 40 வயதுடைய சி.உதயகுமார் என்ற குடும்பஸ்தர்.*

பகுதி -22

**கள்ளப்பாட்டு** கரையில இருந்து கடலுக்குப்போகேக்க காலமை ஆறு மணியாப்போச்சுது. கடல் வெளிச்சிட்டுது. அதால ஒரு ஆறுமையில் தூரம் தான் வரும் போய் வலைபுடுத்தம். வலைபடுத்திட்டு ஒருமணித்தியாலம் அங்க நிண்டுட்டு (7.30 வரை) படுத்த வலையை இழுத்து முடிக்க நேரம் எட்டே முக்கால் ஒன்பது மணி ஆகீட்டுது.

நாங்கள் நிண்ட தூரத்துக்குள்ள கடல்ல ஒரு வித்தியாசமும் தெரியேல்ல. முன்ன கடல் எப்படி இருந்திச்சோ அதைப்போலத்தான் அண்டைக்கும் கடல் இருந்திச்சு. நாங்கள் படுத்தவலையில அண்டைக்கு நல்ல மீன்பட்டிருந்திச்சுது. 400 கிலோ அளவுக்கு கூடின மீன் பட்டிருந்திச்சு. இப்படி மீன் எல்லாருக்கும் எல்லா நாளும் படாது. அண்டைக்கு எங்களுக்குப்பட்டிருந்திச்சு. எனக்கு இப்படி மீன் கனக்கப்பட்டது இது தான் முதல் தரம் பட்ட மீனுகள் எல்லாம் ஒவ்வொரு இனம், சுறா, பூஞ்சக்கண்ணி, கும்பிளா,. துள்ளுமண்டை, நகர, கெளுறு, காலை இப்படியான பல இன மீன்கள் பட்டிருந்தது.

இப்பத்தைய காலத்தில இப்படி எல்லா இன மீனுகளும் பிடிபடாது. ஏதும் ரண்டின மீன்தான் பிடிபடும். பின்ன நாங்கள் பிடிச்ச மீனுகள் எல்லாத்தையும் போட்டுக்குள்ள பரவினம். போட் முட்டிட்டுது அந்தளவு மீன் நான் அணியத்தில நிண்டனான் எப்படி இஞ்சின் போடப்போறதெண்டு தெரியேல்ல. போறதுக்கு வழியில்ல அந்தளவுக்கு மீன் குவியலாய்இருந்தது. எப்பிடியும் இஞ்சினுக்குப் போகவேண்டும். ஆனால் மீனை உளக்கிக் கொண்டு போகக்கூடாது.நான் ஒட்டத்தால (படகுகரையால) எட்டிவைச்சுப்போய் இஞ்சினை இஸ்ராட்பண்ணி மெல்லமாய் ஓடிவந்தன்.

எனக்குஇவ்வளவு தொகையான மீன் பட்டது பெரிய சந்தோசம். அதைப்பார்க்கப் பார்க்க எனக்குஎன்ன செய்யிறது எண்டு தெரியாத சந்தோசமாய் இருந்தது. நேவி போட்டும் கடலால போய்க்கொண்டிருந்திச்சுது. அவங்களைப்பார்க்கப் பயமாய் இருந்தது. சிலநேரம்




பார்த்தால் கடல் தண்ணி கடலுக்குள்ள வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அதோட சேந்து மரஞ்செடியள், வடலியள் எல்லாம் வந்து கொண்டிருந்தது. இதுகள் எல்லாம் எப்பிடி கடலுக்க வந்தது. எண்டுறதப் பற்றி நான் யோசிக்கேல்ல என்ரயோசினை எல்லாம் எப்பிடி கரைய ஏறுறது எண்டுறதா தான் இருந்தது.

இப்பிடி இருக்க இன்னும் ஒரு போட் காறன் நனைஞ்சு துவஞ்சுஎங்களுக்கு கிட்டவந்தான் அவரை என்ன நடந்தது எண்டு கேட்டம். அவர் 'ஐயோ கரைய போக ஏலாமல் இருக்கு அவ்வளவு கடல் கொந்தளிப்பு என்ரவள்ளம் எல்லாம் தாண்டு ஒரு மாதிரி தப்பிட்டம் கரை எல்லாம் அழிந்து போச்சுது. மனுசி பிள்ளையள் எல்லாம் செத்திருக்கும் போல கிடக்கு நாங்கள் எப்பிடி கரைய போறது திரும்பியும் கடல் வரும் போல கிடக்குநான் உதுக்குள்ள போய் அடிபட்டுத்தான் வந்திருக்கிறன். எப்பிடியும் அடுத்த அலைக்கிடையில எங்கட உயிரைக்காப்பாற்ற வேணும்'' எண்டு சொன்னார்.

அவரின் கதையைக் கேட்டுக் கொண்டிருக்க இன்னொருவள்ளமும் வந்திட்டு நாங்கள் மூன்று வள்ளமும் ஒண்டாய் சேந்து இதுக்குள்ள இருக்கிற ஆக்கள் ஆறு பேரும்

மிஞ்சி இருப்பதாக தெரியவில்லை. இதப்பாத்த உடன என்ர வீட்டுக்காறர் என்ன ஆனார்கள் எண்டு நினைச்சன் அழுகைதான் வந்தது மூளைகலங்கின மாதிரி இருந்தது. கடல்ல இவ்வளவு மீன் பிடிபட்டத மனுசிபிள்ளையளுக்கு சொல்லி சந்தோசப்படுவம் எண்டு எவ்வளவு ஆசையா வந்தன் அவையள் ஒருவரையும் காணேல்ல என்ன பாடுபட்டிருக்குங்கள் இப்பிடியே யோசிச்சுக் கொண்டு நடந்து போக ஒரு காலமும் இல்லாத மாதிரி ஒரு பெரிய வாய்க்கால் விழுந்து முட்ட தண்ணி கடலுக்கு ஓடிக்கொண்டிருந்தது.

அதை எல்லாம் கடந்து என்ர மனுசி பிள்ளையளை தேடி அழுது அழுது பாத்துக் கொண்டு போனன். இப்பிடியே ஐந்நூறு யாருக்கு தாண்டிப் போகேல்ல என்ர பதினாறு வயது மகள் சுபாசினி வீட்டில நித்திரை கொண்டமாதிரி ஒரு காயமும் இல்லாமல் கிடந்தாள். நான் ஓடிப்போய் தூக்கிப்பார்த்தேன் அவளின் உயிர் பிரிந்து போய்விட்டது. நான்இத்தனைநாளாய்கஷ்ரப்பட்டு உழைச்சது அந்தப்பிள்ளைக்காக தான். அவள் இப்பிடிப் போய் விட்டாளே என்று கதறி அழுது கொண்டு என்ர மனுசியைத் தேடினேன்.



எங்களிட்ட மீன் பறிக்கிறவங்கள். அண்டைக்கு நான் பிடிச்ச மீனைப்பறிச்சால் நான் என்ன செய்யிறது. அவங்கள் கிட்டவரக்கூடாது எண்டு மனதுக்குள்ள நேத்திவைச்சன். அங்காலப் பக்கம் திரும்பிக்கூடப் பாக்கேல்ல ஒரேபிடியா கரையை நோக்கி வந்துகொண்டிருந்தம்.

கரைக்கும் நாங்கள் நிக்கிற இடத்துக்கும் ஒருமைல் தூரம் தான் வரும். கரையைப் பார்த்தால் ஒரே இருட்டாகத்தான் தெரிஞ்சது விடியப்புறம் மூண்டுமணி இருட்டுமாதிரி தெரிஞ்சிது. நாங்கள் விடிய ஆறுமணிக்கு நிலம் வெளிச்சவுடன் தானே தொழிலுக்கு வந்தனாங்கள் ஏன் அப்போது வெளிச்சிருந்த ஊர் இப்ப திடீரெண்டு இருண்டு போச்சுது. இது எப்படி நடந்தது? நினைக்க மனதுக்குள் ஏதோ செய்துகொண்டிருந்தது.

அந்தப்படபடப்புக்குள்ளும் என்ன நடந்தது. என்பதை சற்று நிதானித்து சிந்தித்தேன். ஒரு கட்டத்தில் இது எங்கட துறைமாதிரியும் தெரியேல்ல. நிலமாற்றம் மாறிப்போட்டம் எண்டு தான் நினைச்சம். என்ர இத்தினநாள் கடல் அனுபவத்தில நான் இப்படி இடம்மாறிப்போட்ட கொண்டு போட்டம் நான் போட் ஓடினதில பிழை எண்டுறத என்னால நம்ப ஏலாமல் இருந்தது. அதால நான் இது எங்கட இடம்தான் அதில மாற்றம் இல்லை எண்டுற முடிவுக்கு வந்தன். ஆனாலும் கரையைப் பார்க்க ஒரு பயமா இருந்திச்சு.


இப்ப என்ர மனதை நம்பி தொடர்ந்து போறதா? இல்லாட்டி திரும்புறதா? என்ன செய்யிறது என்று யோசிச்சபடியே இஞ்சினை

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

நிப்பாட்டிப்போட்டன். இப்பிடித்தொகையா மீன் பட்டதை வீட்டுக்காரருக்கும் எல்லாருக்கும் சொல்லி சந்தோசப் படவேணும் எண்டு கரைக்குவர இப்படி இருந்தால் எப்பிடி இருக்கும். எனக்கு விசர்விசராய் வந்தது. அப்பிடி இருந்தும் இடத்தை வடிவாய்ப்பார்த்தம் அது எங்கட இடம் தான் கப்பல் நிற்குது. அங்கால எங்கட நிலத்தின்ர தன்மையள் எல்லாம் தெரிஞ்சது. அதுகள் எல்லாத்தையும் வைச்சு இது எங்கட இடம்

எண்டுறத சுவர் பண்ணிப்போட்டம். பிறகு இஞ்சினை இஸ்ராட் பண்ணிக் கொண்டு கரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தம்

ஒரு அரைமைல் தூரம் தான் இருக்கும் கரையில கடல் மோதி எழும்பி சுழண்டடிச்சுக் கொண்டிருந்தது. உயரமாய் எழும்பின அலை நாலு பக்கம் பக்கமாகவும் சுழண்டடிச்சு விழுந்திச்சி இதுவரையும் இப்படி ஒரு கடல் அடியை நாங்கள் கண்டதே இல்லை. ஒருபக்கம் தான் கடல் அடிச்சதைக் கண்டிருக்கிறம். ஆனால் இது எல்லாப்பக்கத்துக்கும் அடிச்சுக்கொண்டிருந்தது. இதுக்குள்ளால



எப்பிடி கரைக்குப் போறது எப்பிடியும் அருமையாய் பிடிச்சஇந்தளவு மீனையும் கொண்டு போக ஏலாது சிலநேரம் போட் கவுண்டாலும் கவுண்டு போடும் என்ன செய்யிறது எண்டு யோசிச்சுக்கொண்டு எப்பிடியும் ஊருக் கபோகவேணும் இதப்பாத்துக் கொண்டு நின் றால் நாங்களும் சாகவேண்டித்தான் வரும். எப்பிடியும் ஒரு ஊடுபாத்து கரையில கொண்டு போய் ஏத்திட்டம் எண்டால் சரி எண்டுற முடிவுக்கு

வந் திட்டம். கடலடிக் குள்

சிக்குப்பட்டு போட் கவுண்டு கடலுக்க பிரண்டு உறுண்டாலும் போட்டில பிடிச்சுக் கொண்டு கரைக்குப் போகலாம் எண்டுற நம்பிக்கையில உடுப் பெல்லாத்தையும் கழட்டி அணியத்துக்க போட்டுட்டு கரையைநோக்கி ஓடி வந்தம். கடல்லகரையில இருந்து முந்நூறு யார் தூரத்துக்க வந்திட்டம் எங்கட பதினைந்து கோஸ்பவர் இஞ்சின் எட்டு கோஸ் பவர் இஞ்சின் போறாமாதிரி அடங்கிக் கொண்டு போய்ச்சுது. என்னடா இஞ்சின் அடங்குது ஏன் இழுக்குதில்லை எண்டு

ஒரு வள்ளத்தில ஏறிப்போவம் இந்தப் பாரம் எல்லாத்தையும் மற்றபோட்டில போட்டுட்டு அதுகள கடல்ல விட்டுட்டுது போவம் எண்டு கதைச்சு முடிவுக்கு வந்தம்.

இந்தநேரம் கரையில நடந்த பிரச்சினையள் எல்லாம் முடிவுக்கு வந்திட்டுது

இப்பிடி இருக்க மற்ற போட்காறன் "முன்னதவிட இப்ப கடல் அமந்திட்டுது கரையபோகலாம்'' எண்டு சொன்னான். அதைக்கேட்ட உடன போகலாம் போலதான் இருந்தது .அப்பநான் மூன்று போட்டையும் சேத்து கரைக்கு விடுவம் நடக்கிறதப் பாப்பம் எண்டு கதைச்சு ஒரேயடியா போட்டை கரைக்கு விட்டம்.

ஒரு மாதிரி கரைக்கு ஏத்திப் போட்டம் ஏத்தினபிறகு பாத்தால் கரையில எதுவுமே இருக்கேல்ல. கள்ளப்பாடு இருந்த இடத்தில ஒண்டையுமே காணேல்ல. என்ரை வீடு இருந்த நாமமே தெரியேல்ல. இப்பிடி இருக்க கொஞ்சப்பேர் ஓடிவந்து "படகுவலை ஒண்டையும் பாக்க வேண்டாம் ஏலும் எண்டால் இஞ்சின கழட்டி புட்டியில வைச்சிட்டு உங்கட மனுசி பிள்ளையளைப் போய் பாருங்கோ''என்று சொன்னார்கள். உடனயே இஞ்சினை கழட்டி வைச்சிட்டு மனுசிபிள்ளையளை தேடிவெளிக்கிட்டு விட்டேன்.

எங்கட வீடு கடல்கரையில இருந்து முந்நூறு யார் தூரத்தில இருந்தது. வீட்டையே காணேல்ல எங்கடவீட்டுக்குப் பக்கத்தில இருந்த தீத்தக்கரை அம்மாளாச்சி கோயில் இடிந்து விழுந்து போய் இருந்தது எதுவுமே

அப்பிடியே தேடிக்கொண்டு போக என்ர அக்கான்ர பொடி மாமியின்ரபொடி மச்சாளின்ர பொடி எல்லாம் பக்கத்தில பக்கத்தில கம்பியள் எல்லாம் கிழிச்சு கிடந்தது. அண்டு முழுக்க தேடினன் மற்ற ஒருத்தரையும் காணவே இல்லை இருண்ட உடன அங்க இருந்து வெளிக்கிட்டு வந்திட்டன் அப்பத்தான் முகாமில என்ர மூத்த பெடியனை கண்டேன் அவனுக்கு அம்மா, அக்கா, தம்பி தங்கச்சி எல்லாம் எங்கஎண்டு தெரியாது. அவன் சொன்னான் "கடல்வரேக்குள்ள அம்மா என்னட்ட தம்பியத்தந்திட்டு அப்பா கடல்ல நீங்கள் ஒடுங்கோ நான் அப்பாவராமல் வரமாட்டன் அவர் என்னபாடோ தெரியாது அவரக் கண்டு தான் நான்வருவன் எண்டு சொல்லிக் கொண்டு கடலைப் பார்த்துக்கொண்டு நிண்டவா'' எண்டு சொன்னான்.

அவன் சொன்னத கேட்க எனக்கு தலையை பிளக்க வேணும் போல இருந்தது

**அ.லோகீசன்**

அப்பிடி வேதனையாக இருந்தது. அடுத்த நாள் விடிய வெள்ளன எழும்பிப் போயும் எல்லா இடமும் தேடிப் பாத்தன் மனுசி (சுபத்திரா) யின்ரயும் கடசிப் பெடியன் (கோபிநாத்)ரையும் பொடிய எடுக்கவே இல்லை. எங்கட குடும்பத்தில எல்லாருமா சேத்து ஆறு பேர் இப்ப மூன்று பேர்தான் இருக்கிறம் நானும் ஒரு மகனும் ஒருமகளும் தான் இருக்கிறம் மிச்சம் ஒருத்தரும் இல்லை.

நான் என்ர குடும்பத்தை கட்டி வளக்க இந்தக் கடலைத் தான் நம்பி இருந்தனான் ஆனால் இந்தக் கடல் என்ர குடும்பத்தையே சிதைச்சு அழிச்சுப் போட்டுது தம்பியவ என்று புலம்பி கண்ணீர்சொரிந்தார்அந்த தொழிலாளி.

களமுனையில் தனது காலை இழந்த கடற்படைப் போராளி ஒருவர் சம்பவம் இடம் பெற்ற சமயம் கரையோரத்தில் அமைந்துள்ள அவர்களின் முகாமில் இருந்து அலையுடன் அடி பட்டுப் போய் விளையாட்டு மைதானத்துக்குப் முன்பாகவுள்ள வயலுக்குள் தேங்கி நின்ற பெருமளவான கடல் நிருக்ணகுள் தத்த ளித்து எதிர் பாராத விதமாக உயிர் தப்பியிருந்தார். அவரின் வித்தியாசமான அனுபவங்களை அடுத்த பகுதியில் தருகிறோம்.

(தொடரும்)

# 500மில். டொலர் கடன்களை நீக்க முடிவு

(கொழும்பு)

2005ஆம் ஆண்டு இலங்கையில் செலுத்தப்படவேண்டிய கடன் தவணைதொகையான 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை நீக்குவதற்கு ஜீ-7 நாடுகள் இணங்கியுள்ளன. 2006 ஆம் ஆண்டு தொடர்பாக குறிப்பிட்ட நாடுகள் கலந்துரையாடி சிறந்த தீர்மானம் ஒன்றை எடுக்குமென தாம் எதிர்பார்ப்பதாக சிறிலங்கா நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். ஜப்பானுக்கு விஜயம் செய்து நேற்றுமுன்தினம் காலை நாடுதிரும்பிய அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


## தமிழீழ போக்குவரவுக் கழகம்

### ஊர்தி தூய்மையாக்குநர்

## பணிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பணியினை ஆற்ற விரும்புபவர்கள் நேரில் விண்ணப்பங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்

**தகைமைகள்:-**

1.கல்வித்தகைமை:- ஆண்டு 08
2. அகவை:- 20 தொடக்கம் 35 வரை

**குறிப்பு:-**

1. 17.02.2005, 18.02.2005 ஆகிய இரு நாட்கள் காலை 09.00 மணி தொடக்கம் பகல் 02.00 மணிவரை கிளிநொச்சி பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அருகிலுள்ள தூய்மிப்பகத்தில் நடைபெறும்.
2. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
3. உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் வருகை தரவும்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழ போக்கு வரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-11329)


# சர்வதிகார ஆட்சி ஒன்றை அரசு மேற்கொள்ள முனைகிறது

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

அரசாங்கம் சர்வதிகார ஆட்சி ஒன்றை மேற்கொள்ள முயல்வதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டமூலம் தொடர்பானவிவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்தக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சுனாமியைப் பயன்படுத்தி அரசாங்கம் தனது சர்வதிகார ஆட்சியினை நடைமுறைப்படுத்த முற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க கருத்து வெளியிடும் போது சனாதிபதி அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கு அனுமதியளித்துள்ளார். அவசரகால சட்டமானது அவசியம் என்று கூறியுள்ளார்.

# 75,000 ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கத் திட்டம்

75,000 ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதாக கல்விஅமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான பாராளுமன்ற அங்கீகாரம் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு தகவல்கள் தெரிவித்துள்ளது.

பதவி உயர்வு தொடர்பான சுற்று நிருபங்கள் எதிர்வரும் ஒரு சிலதினங்களில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது இலங்கையில் உள்ள ஆசிரியர் தொகையில் 70 சதவீதம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1994ஆம்ஆண்டுஒக்ரோபர் 6ஆம் திகதி வெளியான ஆசிரியர் சட்டமூலத்திற்கு அமைய சேவைக் காலம் கல்வித் தகைமை என்பவற்றின் அடிப்படையில் இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## அவசரகாலச்சட்ட நீடிப்பு 106 வாக்குகளால் நிறைவேறியது

கடற்பேரலையினால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை 86 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப் பிரேரணைக்கு ஆதரவாக 106 வாக்குகளும் எதிராக 20 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.. அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவாக ஜாதிகஹெல உறுமய கட்சி வாக்களித்துள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனும் இப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.


# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 | 25 |
| 10 | 02 |
| 1983 | 2004 |



திதி 13 . 02 . 2005

அமரர்

## ரெங்கசாமி ஜெகதீஸ்வரன் (ஜெகன்)

ஆயப்பகுதி, புளியங்குளம் பணியாளர்

13.02.2005அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

154ஆம் கட்டை திருமுறிகண்டி
செல்வபுரம், கிளிநொச்சி.

தகவல்:-
ரெங்கசாமி குடும்பத்தினர்.


(5722)



# 31ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 1975 - 03 - 28

இறப்பு 2005 - 01 - 13



## காந்தன் அமிர்தலிங்கம் (ரவி கஜேந்திரன்)

நேச விதைகளை நெஞ்சில் தூவி,
நினைவு விழுதுகளை ஆழப்புதைத்து
வேர்களைப் பிடுங்கிக் கொண்ட
எம் இனிய கஜேந்திரனே!
மறக்க முடியாது உன் மரணம்
உயிர் வாடி விட்டாலும்,
மாத மொன்று சென்றாலும்,
ஆறவில்லை எம் மனது
மீண்டு ஒருமுறை வருவீரோ என
விரும்புகிறது எம் உள்ளம்
அத்தனையையும் பொய்யாக்கி
தவிக்க விட்டே பறந்தோடி விட்டாய்
ஆனால் உன் திருவுருவம்
எம் கண்ணில் ஓவியமாய்
நிலைத்திருக்கும்,
எம் நெஞ்சங்களில் நிழல்போல்
மறையாதிருக்கும்.

உன்பிரிவால் துயருற்றுநிற்கும்
சுரேஸ் பெரியம்பி, முருகா,
மற்றும் நண்பர்கள்


வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு.

(5682)



# 31ஆம் நாள் நினைவாக

| விண்ணில் | மண்ணில் |
|---|---|
| 28 | 13 |
| 03 | 01 |
| 1975 | 2005 |



## காந்தன் அமிர்தலிங்கம் (ரவி கஜேந்திரன்)


மாதம் ஒன்று சென்றிடினும்
நீங்கவில்லை உன்நினைவு
நெஞ்சமதில் கோவில்கொண்டு
உன்அன்பால் எமைக்கவர்ந்து
எம்மில் நிறைந்திருந்தாய்-இன்று
எமை தவிக்கவிட்டு விண்ணுலகம் சேர்ந்தனையோ
உயிர்வாடி விட்டாலும் -எம்
உள்ளமதில் உன் நினைவு
ஆழப்பதிந்திருக்கும்
இன்றும் என்றும் உன் நினைவால்
துயர் உறும் அன்பு

அம்மா, அப்பா,
சகோதரர்கள், மைத்துனன்,
மைத்துனிமார். பெரியப்பா,
சித்தப்பா,சித்திமார்.

த.மு:-வள்ளிபுனம்
புதுக்குடியிருப்பு.

(5683)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும், நன்றி நவிலலும்



| செந்தூர்ச்செல்வன் ரூபமாலா | செந்தூர்ச்செல்வன் ரவிக்காந்த் | சின்னத்துரை துரைராசா | ஜெயப்பிரகாஸ் நிசாலினி | ஜெயப்பிரகாஸ் சீதாலட்சுமி (அம்மன்) |
|---|---|---|---|---|
| 1975.10.25 | 1999.05.15 | 1935.08.03 | 1992.01.02 | 1969.08.02 |
| 2004.12.26 | 2004.12.26 | 2005.01.15 | 2004.12.26 | 2004.12.26 |

**முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச்** சேர்ந்த எம் உறவுகள் சுனாமியின் கோரத்தில் அகப்பட்டு உயிர்நீத்த வேளையிலும், அக்கோரத்தில் அகப்பட்டு சுகயீனமாக இருந்து கடந்த 2005.01.15ஆம் திகதி சனிக்கிழமை எமது குடும்பத்தலைவர் எங்கள் குலவிளக்கு **அமரர் சின்னத்துரை துரைராசா** அவர்கள் அமரத்துவம் அடைந்த வேளையிலும், ஓடோடி வந்து அருகில் இருந்து உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் மரணச்சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் வார்த்தை கூறியோர், தந்திமூலம் அனுதாபச் செய்தியை அனுப்பியோர், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் வார்த்தை கூறியோர், சாந்தி பாடல்கள் பாடியோர், மரணக்கிரியைகளுக்கு உதவியோர், இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியோர் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அத்தோடு நாளை 2005.02.14 ஆம் திகதி திங்கட்கிழமை வட்டுவாகலில் நடைபெறும் எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-

**மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.**

5686



# கிப்ஸ் சிறப்புத் துடுப்பாட்டம்;

# தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்க!

தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக்கொண்டது.

வோன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான ஏழு ஒரு நாள் போட்டித் தொடரில் 3ஆவது, 4ஆவது மற்றும் 5ஆவ்து போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. முதல் போட்டியில் இங்கிலாந்து வென்றது. 2ஆவது போட்டி சமநிலையில் முடிந்தது. ஆறாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் இடையேயான 6ஆவது ஒரு நாள் போட்டி டார்பனில் பகல் - இரவாக நேற்று முன்தினம் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் விளையாடியது. 4ஆவது வீரராக களம் இறங்கிய கிப்ஸ் மிகவும் சிறப்பாக விளையாடி 'சதம்' அடித்தார். அவர் ஒருவரால் மட்டுமே சிறப்பாக விளையாட முடிந்தது.

தென்னாபிரிக்க அணி 46.3 ஓவர்களில் 211 ஓட்டங்களில் சுருண்டது. கிப்ஸ் 133 பந்துகளில் 10 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 118 ஓட்டங்களை எடுத்தார். அவருக்கு அடுத்த படியாக எடுக்கப்பட்ட ஓட்டம் 27 ஆகும். பிரின்ஸ் இந்த ஓட்டத்தை எடுத்தார்.

இலங்கிலாந்து தரப்பில் வார்ப், கபீர் அலி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களும், டாரன்கொவ் இரண்டு விக்கெட்டும், கொலிங் வூட், ஹைஹல்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.



212 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் இங்கிலாந்து பின்னர் ஆடியது. அந்த அணி 3.4 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு ஏழு ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழை பெய்தது. தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

தொடக்க வீரர்களான ரெஸ்கொதிக் ஒரு ஓட்டத்துடனும், ஜோன்ஸ் 2 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். போலக், நிதினி தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர்.

ஆட்டம் மழையால் பாதியில் ரத்து செய்யப்பட்டதால் தென்னாபிரிக்கா தொடரை கைப்பற்றியது. இரு அணிகள் இடையேயான 7ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

டெஸ்ட் தொடரை இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் ஏற்கனவே கைப்பற்றியிருந்தது.

## சர்வதேச போட்டிகளில் விளையாட ஆசையில்லை



அசாருதீன்

"சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட விருப்பம் இல்லை" என்கிறார் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அசாருதீன்

மேட்ச் - பிக்சிங் பிரச்சினையால் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டவர் இந்திய அணியின் முன்னாள் தலைவர் அசாருதீன். இவர் நேற்று முன்தினம் கொச்சியில் மூத்த வீரர்கள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க வந்திருந்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறுகையில், மீண்டும் சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பு அமையும் என நான் நினைக்கவில்லை. திரும்பவும் விரும்பவில்லை. பழைய நண்பர்களை சந்திப்பதற்காகத்தான் இது போன்ற போட்டிகளில் விளையாட ஆர்வம் காட்டிவருகிறேன். இந்திய - பாக், தொடரில் இரு அணிகளுமே சமபலத்தில் உள்ளன'' இவ்வாறு அசாருதீன் கூறினார்.

## இந்தியாவை வீழ்த்த ஒரே வழி வேகப்பந்து வீச்சை பயன் படுத்துவதே



இம்ரான்

"இந்திய அணியை வீழ்த்த பாகிஸ்தானுக்கு உள்ள ஒரே வழி வேகப்பந்து வீச்சுத் தான்" என்கிறார் இம்ரான்கான்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி எதிர்வரும் 25 இல் இந்தியாவருகிறது. இத்தொடர் குறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான இம்ரான்கான் அளித்த பேட்டியில் கூறியதாவது;

இந்திய வீரர்கள் சுழற்பந்து வீச்சில் அபாரமாக ஆடக்கூடியவர்கள். உலகின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் கூட இந்தியத் தொடரில் பிரகாசிக்க முடிவதில்லை. ஆனால் வேகப்பந்துவீச்சில் இவர்கள் கொஞ்சம் திணறுபவர்கள். இது பாகிஸ்தான் அணிக்கு சாதகமானது. இங்கு வேகப்பந்து வீச்சாளர்களுக்குப் பஞ்சமில்லை. பாகிஸ்தான் அணி முழுவதுமாக வேகப்பந்து வீச்சை மட்டுமே நம்பியுள்ளது. இதைச்சரியாகப்பயன்படுத்திக் கொண்டால் இந்தியத் தொடரில் வெற்றி வாகை சூடலாம். கடைசியாக 1999 இல் இந்தியா சென்றபோது வேகப்பந்து வீச்சுத்தான் முழுமையாகக் கைகொடுத்தது. தற்போது அக்தர், சமி இருவரும் அனுபவம் மிக்க வீரர்களாக உள்ளனர். இவர்கள் சிறப்பாக செயற்படும் பட்சத்தில் கோப்பையைக் கைப்பற்றலாம் இவ்வாறு கூறியுள்ளார் இம்ரான்கான்

## இந்தியாவுக்கான பாக். அணி இன்சமாமே தலைவராக இருப்பார்




இந்திய சுற்றுப் பயணம் செய்யும் பாகிஸ் தான் அணிக்கு இன்சமாமே மீண்டும் தலைவராகநியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இம் மாதம் 25 ஆம் திகதி முதல் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் மோதவுள்ளது. அகமதாபாத் நகரில் நடக்கும் டெஸ்ட் போட்டியில் ஆட பாகிஸ்தான் மறுத்து விட்டதைத் தொடர்ந்து போட்டி அட்டவணை இன்னும் இறுதி செய்யப் படவில்லை. அடுத்த வாரத்துக்குள் அனைத்து விபரங்களும் முடிவு செய்யப்படும் எனத் தெரிகிறது.

இந்த நிலையில் இந்தியா வரும் பாகிஸ்தான் அணிக்கு இன்சமாம் மீண்டும் தலைவராக இருப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவுஸ்திரேலிய பயணத்தில் வீரர்கள் குறிப்பிடத்தக்க வகையில் ஆடியதற்கு ஷாரியார் கான் வாழ்த்துக்கள் தெரிவித்தார். இவர்கள் சந்திப்பின்போது இந்தியப் பயணத்தின் போதும் தலைவர் பதவியில் மாற்றம் இல்லை என்று ஷாரியார் கான் இன்சமாமிடம் கூறியதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## வேகப் பந்து வீச்சாளர்களுக்கு சுழற்சி முறையில் ஓய்வு அவசியமல்ல




பிரெட்லீ

"சுழற்சி முறையில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஓய்வு தருவது சரியல்ல...." என்கிறார் அவுஸ்திரேலிய அணியின் 'வேகப்புயல்' பிரெட்லீ.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கடந்த இரண்டு ஆண்டுகளாக 'சுழற்சி முறையில்' வீரர்களைத் தேர்வு செய்து வருகிறது. ஒருநாள் போட்டிகளில் இந்த முறையில் தான் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் 14 வீரர்களும் அணிக்கு உபயோகமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறது அந்நாட்டு கிரிக்கெட் அமைப்பு. இந்த முறை அவசியமில்லை என்கிறார் பிரெட்லீ.

"ஒருநாள் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு'சுழற்சி முறையில்' வாய்ப்பு அளிக்கப்படுகிறது. கடந்த போட்டியில் விளையாடிய ஒரு வீரர் அடுத்த போட்டியில் இடம் பெற மாட்டார். வீரர்கள் பயிற்சி முறை, ஆட்ட முறை இரண்டும் இதனால் வீணாக்கப்படுகிறது. திறமையிருந்தும் ஒருவர் புறக்கணிக்கப்படுகிறார். ஒரு வீரருக்கு ஓய்வு அவசியம் என்றால் அவரே கேட்டு வாங்கிக் கொள்ளலாமே? நிர்வாகம் தர வேண்டுமா என்ன?" என்கிறார்

பிரெட்லீயின் இந்தக் கருத்தை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அலன்போர்டரும் ஆதரித்துள்ளார்.



சியராவில் நடந்த கால்பந்து போட்டியில் கொலம்பியா( பாரன்குயிலா) அணி 3-1 என்ற கோல் கணக்கில் பொலிவியா (ஓரியன் பெட்ரோலெரோ) அணியை வீழ்த்தியது. பொலிவிய வீரர் ஜுவன் அர்ஸ் (வலது), கொலம்பியா வீரர் ஜேனிலர் அல்வியர் இருவரும் பந்தை தட்டிச் செல்ல முனைகின்றனர்.

## சாப் ஓபன் டென்னிஸ் காலிறுதிக்கு ஆந்ரே அகாசி



சாப் ஓபன் டென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு அமெரிக்காவின் ஆந்ரே அகாசி தகுதிபெற்றார்.

கலிபோர்னியாவில் ஏ.டி.பி. அந்தஸ்துப் பெற்ற சாப் டென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் 34 வயது அனுபவ வீரரான அகாசி டென்மார்க்கின் கென்னத் கார்ல்சனை 7-5, 6-1 என்ற நேர் செட்களில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு அமெரிக்க வீரரான ஆண்டி ரோடிக் தென்கொரியாவின் லீஹியுங் தைக்கை 6-3, 3-6, 6-2 என்ற செட்களில் போராடி வென்றார்.

பிரான்சின் சிரில் சால்னியர் செக்குடியரசின் தாமஸ் ஜிப்பை 6-1, 7-6 என்ற செட்களில் வீழ்த்தினார். இதேபோல் சுவீடனின் தாமஸ் என்குவிஸ்ட் அமெரிக்காவின் ராபி கின்ப்ரியை 6-3, 7-6 என்ற நேர் செட்களில் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார்.

## பங்களாதேஷ்-சிம்பாப்வே அணிகளுக்கு டெஸ்ட் போட்டிகளை மட்டுப்படுத்த ஆலோசனை

டில்லியில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) இரண்டு நாள் கூட்டம் வரும் மார்ச் 17இல் தொடங்குகிறது.

இதில் டெஸ்ட் போட்டியில் இரண்டு அடுக்கு முறை சர்வதேச கிரிக்கெட் அட்டவணையைத் திருத்தி அமைப்பது உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப் படவுள்ளன. பங்களாதேஷ் போன்ற அணிகளுடன் விளையாடுவதால் எவ்வித பயனும் இல்லை. எனவே வளர்ச்சி அடைந்த அணிகளுக்கு இடையே மட்டும் டெஸ்ட் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகள் கோரிக்கை வைத்தன. இதை அடுத்து இரண்டு அடுக்கு முறை பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதன்படி டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பத்து அணிகளில் வளர்ச்சி அடைந்த எட்டு அணிகள் முதல் நிலையிலும் பங்களாதேஷ் சிம்பாப்வே இரண்டாம் நிலையிலும் விளையாடும். தொடர்ந்து தோல்வியைச் சந்திக்கும் இந்த இரு அணிகள் பெரும்பாலான டெஸ்ட் போட்டிகளை சொந்த மண்ணில்தான் விளையாட வேண்டும். ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே வெளிநாடு செல்ல முடியும். இந்த முறை அமுல்படுத்தப்பட்டால் கென்யா நெதர்லாந்து அணிகள் டெஸ்ட் அந்தஸ்து பெறக்கூடும்.

## கால்பந்து, மென்பந்து போட்டி; விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்கென பூநகரி பிரதேச விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினரால் மாபெரும் உதைப்பந்தாட்ட, மென்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நடாத்தப் பெறவுள்ளது. இப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


மேற்படி போட்டியில் ஒரு கழகத்திலிருந்து இரு அணிகள் பங்குபற்றலாம் எனவும் இதற்கான விண்ணப்பங்களை மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை செயலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என ஏற்கனவே தெரியப்படுத்தப்பட்டுள்ளது.இவற்றிற்கான விண்ணப்ப முடிவுத்திகதி 10.02.2005 என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் விண்ணப்பங்கள் வந்து சேராததன் காரணமாக எதிர்வரும் 17.02..2005 வரை விண்ணப்பங்களை அனுப்பலாம் என பூநகரி பிரதேச விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (கு)




## பாகிஸ்தானுக்கு எதிரான போட்டி இந்தியா சாதனை படைக்கும்

### ஷேவாக்

பாகிஸ்தானுடனான போட்டியில் இந்தியா சாதனை நிகழ்த்தும் என்று ஷேவாக் கூறியுள்ளார் கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் சென்றபோது மகத்தான வெற்றி கிடைத்தது. இந்த முறை பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது. இந்திய ரசிகர்களின் அமோக ஆதரவு இருப்பதால் நமது வெற்றிக்குத் தடை எதுவும் இருக்க முடியாது என்றார். கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் சென்றபோது டெஸ்ட் போட்டியில் ஷேவாக் 300இற்கும் அதிகமான ஓட்டம் எடுத்தார். இந்திய டெஸ்ட் வரலாற்றில் இந்த சாதனையை எட்டிய முதல் வீரர் என்ற பெருமையை ஷேவாக் பெற்றது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் நடந்த சேலஞ்சர் கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஷேவாக் சரியான முறையில் ஓட்டம் எடுக்கவில்லை என்பது வேதனையான விடயமாகும்.



### சிந்தனைக்கு

எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## இந்தியாவிற்கு எச்சரிக்கை!

சிறிலங்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் துரிதமாகச் செயற்பட்டு கூடிய விரைவில் உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு இந்திய அரசைச் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கோரியுள்ளார். பாகிஸ்தானில் வைத்து இக்கோரிக்கை விடுக்கப்பட்டதினால் இவ்விவகாரமானது இந்தியா–சிறிலங்கா இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தத்துடன் தொடர்புடையதானது மட்டுமல்லாது அதற்கு அப்பாலான அரசியலையும் வெளிப்படுத்துவதாகவே கொள்ளவேண்டியுள்ளது.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும் எனச் சிறிலங்கா அரசு கடந்த காலத்தில் தீவிர அக்கறை கொண்டுள்ளமை அனைவரும் அறிந்ததே. இது குறித்து இரு தரப்பினர் இடையேயும் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளதோடு இவ் உடன்பாட்டின் இறுதி வடிவமும் எட்டப்பட்டு விட்டது என்றேகருதப்படுகிறது.

இந்நிலையில் கடந்த நவம்பர் மாதத்தில் இந்தியாவிற்குச் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. சிறிலங்கா அரச தரப்பு இவ்விடயத்தில் பூரண நம்பிக்கையும் கொண்டிருந்தது.

ஆனால் தமிழக அரசியற்கட்சிகள் சில மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசாங்கத்திடம் இதற்குகெதிராக கொடுத்த அழுத்தத்தின் காரணமாக இறுதி நேரத்தில் சைச்சாத்தாவது தடுக்கப்பட்டது. இது சிறிலங்கா அரசிற்குப் பெருத்த ஏமாற்றமாக அமைந்தது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இந்நிலையில் கிடப்பில் போடப்பட்டிருந்த உடன்பாட்டை தற்பொழுது கையில் எடுத்துக் கொண்டே கதிர்காமர் இந்தியா விரைவில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும் எனக் கோரியுள்ளார். கதிர்காமர் இக்கோரிக்கையை பாகிஸ்தானில் வைத்து விடுத்துள்ளதால் இது பிராந்திய விடயத்தில் முக்கியமானதொன்றாகக் கொள்ளக் கூடியதாகிறது.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அது தாமதத்திற்குள்ளாகியுள்ள நிலையில் சிறிலங்கா அரசு தனது ஆயுதபலத்தை உறுதியானதாக ஆக்கிக் கொள்ளும் வகையில் தீவிர செயற்பாட்டில் இறங்கியது. இந்த வகையில்பல்வேறு நாடுகளிடம் இருந்து ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதிலும் பல்வேறு நாடுகளுடன் பாதுகாப்பு உடன்பாடுகளைச் செய்வதிலும் அக்கறை காட்டி வரு கின்றது.

இந்தவகையில் ஏற்கனவே சீனாவிடம் இருந்து வந்த நட்புறவை வலுப்படுத்திக் கொண்டதோடு புதிய நட்புறவைத் தேடிக் கொள்ளவும் முற்பட்டது. இந்த வகையிலேயே ஈரானுடன் ஆயுதக் கொள்வனவு தொடர்பாக சிறிலங்கா அரசு பேச்சுக்களை நடத்தியது. ஈரானுடனான இவ்ஆயுத பேரமானது சிறிலங்காவைப் பொறுத்து புதியதொரு உறவு என்றே கொள்ளுதல் வேண்டும்.

இந்த நிலையில் தற்பொழுது பாகிஸ்தான் சென்றுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வர்த்தக உடன்பாட்டில்கையொப்பம் இட்டிருக்கலாம். ஆனால் இராணுவ ஒத்துழைப்புக் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு எதிர் பார்க்கப்படுவது தவறுமில்லை. ஏனெனில் சிறிலங்கா அரசிற்கான பிரதான ஆயுத விநியோகஸ்தர் பாகிஸ்தான் என்பது ஏற்கனவே அறியப்பட்ட தொன்றாகும்.

ஆனால் தற்பொழுது கவனிக்கப்படவேண்டியதாகவுள்ளது இந்தியா–சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாடு குறித்து பாகிஸ்தானில் வைத்து கதிர்காமர் கருத்துவெளியிட்டுள்ளமையாகும். அதாவது இந்தியாவின் பகைநாடான பாகிஸ்தானில் இருந்து கோரிக்கை விட்டமையானது இந்தியா விரைந்து நடவடிக்கை எடுக்காதுவிடில் சிறிலங்காவின் நிலைப்பாடு வேறு விதமானதாக மாற்றம் அடையலாம் என எச்சரிப்பது போன்றதாகவே உள்ளது.

அதாவது இந்தியாவின் விரோதி நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராக உள்ளோம் என்ற அறிவிப்பே ஆகும். சீனா, பாகிஸ்தான் என்பனவற்றுடன் இந்தியா ராஜீக உறவுகளை கொண்டிருப்பினும் இவ் இருநாடுகளும் இந்தியாவுடன் யுத்தம் புரிந்துள்ளமை மட்டுமல்ல தற்பொழுதும் இவ்விருநாடுகளுடனும் ஆயுதப் போட்டியில் ஈடுபட்டுள்ளது. இது தவிர ஈரானும், பாகிஸ்தான், சீனா ஆகியவற்றிற்கு நெருங்கிய நட்புநாடாகும்.

இந்நிலையில் தன்னையும் சிறிலங்கா அரசு அக்கூட்டிற்குள் (சீனா–பாகிஸ்தான்–ஈரான்) இணைத்துக் கொள்ள முற்படுவதாகவே அண்மைய போக்குக் காட்டுகின்றது. இதன் வெளிப்படாகவே இந்தியா விரைந்து தீர்மானம் எடுக்கவேண்டும் என்ற கதிர்காமரின் கோரிக்கையாகும். இதனை வேறுவிதமாகக் கூறுவதனால் இந்தியா விரைந்து செயற்படாது போனல் தாம் ஏனையவர்களுடன் உடன்பாடுகளுக்கு வரலாம் எனச்சிறிலங்கா அரசு விடுத்த எச்சரிகையாகவும் கொள்ளலாம்.

## கௌசல்யன் குழுவினர் மீதான படுகொலைக்கு அனானின் அனுதாபம் மனநிறைவைத் தருகிறது

### -கிளி.மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் கொபி அனானிற்கு கடிதம்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 07.02.2005 அன்று சிறிலங்காஅரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பணிப் போராளிகளும், முன்னாள் பராளுமன்ற உறுப்பினரான அரியநாயகம சந்திரநேரு அவர்களும், பொதுமகனான விநாயகமூர்த்தி அவர்களும படுகொலை செய்யப்பட்டமைக்குத் தாங்கள் தெரிவித்திருக்கும் அனுதாபச் செய்தியானது தங்கள் சபையின் நியாயாதிக்கத்தை ஏற்று வாழும் ஒரு தேசிய இனம் என்ற வகையில் எம்மை நிறைவடையைச்செய்கின்றது. அதற்காக எமது அமைப்பு நிறைவைத் தங்களுடன் பகிர்ந்து கொள்கின்றது

என கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கொபிஅனானிற்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

அண்மையில் தாங்கள் சிறிலங்காவிற்கு வருகைதந்திருந்தபோது சுனாமிப் பேரலையினால் எங்கள் சக உறவுகள் சாவையும், சாவு சார்ந்த அவலங்களையும் சந்தித்து மாபெரும் மனித அவலத்திற்கு முகம்கொடுத்தபோது எமது பிரதேசங்களானமுல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிழக்குப் பகுதிகளுக்கும் தாங்கள் வருகைதருவீர்களென பலத்த எதிர்பார்ப்புடன் காத்திருந்தோம். இருந்தபோதும் துரதிஷ்டவசமாகத் தங்களின் பிரசன்னம் எமது பகுதிக்குக் கிடைக்காமையையிட்டுப் பலத்த ஏமாற்றம் அடைந்திருந்தோம். தாங்கள் பொறுப்பாட்சி செலுத்தும் ஸ்தாபனத்தின் சர்வதேச நிதிகயையும்,அடிப்படை ஏற்பாடுகளையும் மதித்து ஏற்று வாழும் தேசிய இனம் என்ற வகையில் எமது எதிர்பார்ப்பு நியாயமானது. அவ் எதிர்பார்ப்புப் பொய்த்துப் போனபோது தங்களின் சமத்துவக் கண்கள் எம்மை ஓரவஞ்சனை செய்துவிட்டதாகவே உணர்ந்தோம். இருப்பினும் கடந்த 07.02.2005 அன்று நடைபெற்ற தமிழர் தரப்புப் பிரதிநிதிகள் மீதான படுகொலையைத் தாங்கள அனுதாபத்துடன் நோக்கியிருப்பது எம்மை ஆர்வமடையச் செய்வதுடன் எமது இனமும் தங்கள் அமைப்பால் ஏற்றுக் கொள்ளப் படுகின்ற ஒரு தேசிய இனக் குழுமமாகத் தங்கள் அமைப்பு எதிர்காலத்தில் மதிப்பளிக்கும் என்ற பேரவா எம்மிடம் நிறைந்துள்ளது. தாங்களும், தங்கள் அமைப்பும் எம் இனம்சார்ந்து அளிக்கும் மதிப்புக்களுக்கு எம் இனம் சார்ந்த நன்றிகள் என அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சோ)

## வீரச்சாவடைந்த கௌசல்யன் உள்ளிட்ட ஐவருக்கு பளை மத்தியகல்லூரியில் நினைவு நிகழ்வு

(பளை)

07.02.2005 அன்று பொலநறுவை பிள்ளையாரடி எனும் இடத்தில் இனந்தெரியாத தேசவிரோதக்குழுவினரின் தாக்குதலின்போது வீரச்சாவடைந்த மட்டு - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளினதும் நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு அவர்களினதும் நினைவுக்கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.

முன்னதாக காலை 9.00 மணிக்கு பளை காவல் பணிமனைக்கு முன்னால் இருந்து பளை.மத்திய கல்லூரி வளாகம் வரை பாடசாலை மாணவ, மாணவிகள் வீதியின் இருமருங்கிலும் நிற்க மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன்,மேஜர் செந்தமிழன், 2ஆம் லெப்.விதிமாறன்,மேஜர் புகழன், நாட்டுப்பாற்றாளர் சந்திரநேரு ஆகியோரின் திருவுருவப் படத்தினை தாங்கியவாறு பொது மக்கள் முன் செல்ல அதன் பின் வர்த்தகர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பளைஉதவி அரச அதிபர்பணிமனையினர், பச்சிளைப்பள்ளி பிரதேச உபசபை அதிகாரிகள், பணியாளர்கள், பளைப்பிரதேச கூட்டுறவாளர்கள், தமிழீழ வைப்பக பணியாளர்கள், தமிழீழ போக்குவரவுக் கழகப் பணியாளர்கள், அரச,அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், பணியாளர்கள், போராளிகள்,காவல்துறை உறுப்பினர்கள்,பொதுமக்கள் எனப் பலர் ஊர்வலமாக சென்று பாடசாலையில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் 5 பேரின் திருவுருவப்படங்கள் வைக்கப் பட்டதும்,கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை துணைச் செயலாளர் வ.தியாகராசா தலைமையில் நினைவு அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. முதலில் பொதுச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான பாவலன் ஏற்றிவைக்க மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டது. லெப்.கேணல் கௌசல்யனின் திருவுருவப் படத்திற்கு பளை கோட்ட அரசியல துறைப்பொறுப்பாளர் வின்சன் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். மேஜர் செந்தமிழனின் திருவுருவப் படத்திற்கு பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் சுவாமி நாதன் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தர். மேஜர் புகழனின் திருவுருவப் படத்துக்கு பளைகோட்ட த.தே.எ. பேரவைச் செயலாளர் புவனேந்திரம் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். 2ஆம் லெப் விதிமாறனின் திருவுருவப்படத்துக்கு பளை மத்திய கல்லூரி அதிபர் குணபாலசிங்கம சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு அவர்களின் திருவுருவப்படத்துக்கு வர்த்தகர் வரம் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார். அதனை அடுத்து மலர் வணக்கத்தினை பளை கோட்ட தே.எ.பேரவை துணைசெயலாளர் வ்ணகுணநாதன ஆரம்பித்துவைக்க அதனைத் தொடர்ந்து அனைவரும் மலர்வணக்கம் செலுத்தினர். தலைமையுரையைத்தொடர்ந்து நினைவுரைகளை வர்த்தகர் அமீர், பளைகோட்ட பொது அமைப்புக்களின தலைவர் பூபாலசிங்கமும் நிகழ்த்தினர். (11)

## அவசரகாலச்சட்ட அமுலாக்கம் சனநாயகத்திற்கு விரோதமான பயணத்தின் ஆரம்ப மென்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பது சனநாயகத்திற்கு விரோமான பயணத்தின் ஆரம்பம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெகலியரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்கள் அரசாங்கத்திற்கெதிராக நடத்திவரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அவசரகால சட்டத்தைப் பயன்படுத்த அரசாங்கம் தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்வரும் 21ஆம் திகதி எஸ்.பி. திஸாநாயக்கவை விடுதலை செய்வதற்கான சத்தியாக்கிரகப் போராட்டம்தொடர்பாக ஊடகவியலாளருக்கு தெளிவுபடுத்தும் பொருட்டு நேற்று முன்தினம் கண்டியில் இடம்பெற்ற கூட்ட மொன்றில கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கத்திற்கெதிராக மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதைக் கண்டதனால்தான் இன்று துணிவகைகளை பகிர்ந்தளிக்கவும்,உணவு வகைகளை விநியோகிக்கவும் அவசர காலச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று அரசாங்கம் தெரிவிக்கின்றது. இந்நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் நாங்கள் அனைவரும் சனநாயகத்திற்கெதிரான இந்தப் பயணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் எழுந்து நின்றால் பல தடைகளைத் தாண்டநேரிடும். எனவே இவ்வாறான ஒன்றிற்கு தயாராவ்தே சனநாயகத்தை மதிக்கும் அனைத்துப் பிரஜைகளினதும் பொறுப்பாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முல்லைத்தீவில் இரு பெண்களின் சடலங்கள் கரை ஒதுங்கின

### -உடுப்புக்கள் காவல்துறையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கோயில் குடியிருப்பு என்னுமிடத்திலும் புதுக்குடியிருப்பு வலஞன் மடம் என்னும் இடத்திலும் கடந்த வியாழக்கிழமை மாலை கடல் கரையோரமாக இரு பெண்களின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இதனை யடுத்து புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் சு.கிருபாகரனும், முல்லைத்தீவு காவல் பணிமனை பொறுப்பாளர் இ.றோய்காந்தும் சம்பவ இடத்திற்குவிரைந்து சென்று உரிய தொடர் புலனாய்வை மேற்கொண்டுள்ள னர்.இதன் போதுசம்பவ இடத்திற்கு, சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரும் சமுகமாகினர். தொடர்ந்து,சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லை மாவட்ட முறையாளர் அவர்கள் விசாரணை மேற்கொண்டு சடலத்தை புதைக்கும வண்ணம் பணித்ததையடுத்து சடலங்கள் புதைக்கப்பட்டன. இதில முல்லைத்தீவில் கரையொதுங்கிய சடலத்தில் இருந்த உடைகள் முல்லைத்தீவு காவல் பணிமனையிலே வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் அவைகளை பார்வையிட்டு அடையாளம் காண்பிக்குமாறு முல்லைத்தீவு காவல் பணிமனை பொறுப்பாளரான இ.றோய்காந்த் கேட்டுக்கொள்கின்றார்.

# ஹர்த்தாலைக் குழப்ப ராணுவம் அடாவடி

# ராணுவக் காவலரண்கள் தீ வைப்பு

## படையினர் தாக்கி ஆறு பொது மக்கள் காயம்

புத்தூர் சந்தியிலும் கைதடிச் சந்தியிலும் ஹர்த்தாலைத் தொடர்ந்து போடப்பட்ட வீதித் தடைகளை பலவந்தமாக அகற்று வதற்கு இராணுவக் காவலரணில் இருந்த படையினர் முயன்ற போது எழுந்த வன் முறையை அடுத்து காவலரண்களுக்குத் தீவைக்கப் பட்டது. இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

07.02.2005அன்று வெலிக்கந்தையில் இடம் பெற்ற படுகொலைகளைக் கண்டிக்கும் வகையில் ஏ-9 வீதியின் கொடிகாமம் நகர், புத்தூர் சந்தி, சாவகச்சேரி நகர் மற்றும் கைதடிச் சந்தியெனப் பல பகுதிகளிலும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டி ருந்தன. அத்துடன் அப்பகுதி இளைஞர்கள் வீதிகளுக்கு குறுக்காக ரயர்களைப் போட்டு தீயிட்டெரித்துமிருந்தனர்.

அவ்வேளையில் புத்தூர் சந்தயிலும், கைதடிச சந்தியிலுமுள்ள இராணுவக் காவலரண்களில் கடமையாற்றிக் கொண்டிருந்த படையினர் அத்தடைகளை பலவந்தமாக அகற்ற முற்பட்டனர். இதையடுத்து இரு தரப்புகளிற்குமிடையே மோதல்கள் இடம்பெற்றன. படையினர் மீது சரமாரியான கல் வீச்சும் இடம்பெற்றது. அவ்வேளையில் புத்தூர் சந்தியிலுள்ள குறித்த காவலரணில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் தப்பியோடியதையடுத்து, அக்காவலரண் தீயிடப்பட்டது.

இந்நிலையில் உடடினயாக மேலதிக படையினர் அங்கு குவிக்கப்பட்டிருக்க விரைந்து வந்த கொடிகாமம் பொலிசார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி, இளைஞர்கள் மீது தடியடியில் ஈடுபட்டனர். பொலிசார் நடாத்திய இத் தாக்குதலில் ஆறிற்கும் அதிகமான இளைஞர்கள் காயமடைந்தனர் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அங்கு உடனடியாக வருகை தந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளின் தலையீட்டினில் விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளரும் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சியை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

அதையடுத்து மீண்டும் குறித்த காவலரணை மீள நிறுவும் முயற்சியில் மாலை வேளையில் பெருமளவு படையினர் ஈடுபட்டிருந்தனர்.

சந்திரநேருவின் இறுதிக் கிரிகைக்குச் செல்ல

# உலங்கு வானூர்தி வழுங்க அரசாங்கம் மறுப்பு

நாட்டுப்பற்றாளர் அரியநாயகம் சந்திரநேருவின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மட்டு. அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு ஆகியோர் செல்வதற்கென உலங்குவானூர்தியை சிறிலங்கா அரசு இறுதி நேரத்தில் வழங்காது விட்டது.

மட்டக்களப்பில் இருந்து அம்பாறை திருக்கோவிலில் நடைபெறும் இறுதி நிகழ்வுக்கு செல்வதற்காக நோர்வே அனுசரனையாளர்களூடாக விடுதலைப்புலிகள் உலங்கு வானூர்தியை கோரியிருந்தனர். முதலில் உலங்குவானூர்தியை வழங்க ஒப்புக் கொண்டிருந்த சிறிலங்கா அரசு, இறுதி நேரத்தில் வழங்க வில்லை. இதனால் அவர்கள் நாட்டுப்பற்றாளர் சந்திரநேரு அரியநாயகத்தின் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

## வடக்கு....

பணிகளுக்கு நேரடியாக ஜப்பான் அரசாங்கம் உதவ முன் வர வேண்டும். இவ்வாறு அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் ஜப்பான் விசேட தூதுவர் அகாசிடம் கோரிக்கை விடுத்தார். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களை ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி அவர்கள் மட்டக்களப்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முற்பகல் 11.30மணியளவில் இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களுடன் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் மார்சல் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்ட இச் சந்திப்பு கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் இடம் பெற்றது.

இச் சந்திப்பின் நிறைவில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகங்களுக்கு தனது கருத்தைத் தெரிவித்தார்.

கேள்வி: இன்றைய சந்திப்பு தொடர்பாக

பதில்:-தற்போதய நிலைகள் தொடர்பாக எடுத்து விளக்கியுள்ளோம் குறிப்பாக சமாதான முயற்சிகளை சீர்குலைக்கின்ற நடவடிக்கை அனர்த்த செயற்பாடுகள் தொடர்பாக அகாசியிடம் எடுத்து விளக்கியுள்ளோம். குறிப்பாக எங்கள் கௌசல்யனுடைய படுகொலை சம்பந்தமாக யுத்த நிறுத்த மீறல் ஒன்று அமைதிச் சூழலைத் தகர்க்கின்ற பாரிய யுத்த நிறுத்த மீறலாகவே அமைந்துள்ளது. முழுவதும் இரா ணுவ கட்டுப்பாட்டுப் பகுதியல் இராணுவத்தின் துணையுடன் தான் இப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்பதை நாம் தெளிவாக சுட்டிக்காட்டியுள் ளோம். சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக மிகநெருக்கடியான சூழலை உருவாக்குவதற்கான நிலையினை இப் படுகொலைகள் அமைத்துள்ளது என்பதனையும் விளக்கினோம். அத்தோடு பேரழிவினை மக்கள் சந்தித்து நிற்கிறார்கள் அழிவிலிருந்து மக்கள் மீள்வதற்கு சர்வதேச உதவிகள் தேவையாக உள்ளது. சர்வதேச உதவிகள் இலங்கை அரசு ஊடாக எமது மக்களை வந்து சேராது சர்வதேச உதவிகள் உதவக்கூடிய வழிமுறைகள் ஊடாக கொண்டு வரப்படவேண்டும் அதற்கான வழியினை சர்வதேச சமூகம் இனம் காணவேண்டும்

கேள்வி: உங்கள் கோரிக்கைகளை ஜப்பான் பிரதிநிதி ஏற்றுக் கொண்டாரா?

பதில்:- எங்களுடைய நிலைப்பாட்டையும் கருத்துக்களையும் யசூசிஅகாசி அக்கறையுடன் கேட்டுக்கொண்டார் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் பரிசிலிப்பதாகவும் கூறியுள்ளார்.

## சந்திரநேரு...

களையும், அட்டூழியங் களையும் நெஞ் சுறுதியுடனும், நேர்மைத் திறனுடனும் உலகிற்கு வெளிக் கொணர்ந்தார். சிங்களப் படைகளின் இடைவிடாத அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சுடனும், அபாரமான துணிச்சலுடனும் அநீதியை எதிர்த்துப் போரிட்டார். வடக்கு – கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவனர்களில் ஒருவராக இருந்து, தமிழ் மக்களது உரிமைகளுக்காக ஓயாது உழைத்தார். தமிழ் மக்களது போராட்டநியாயங்களையும், நியாயப்பாடு களையும் தெட்டத் தெளிவாக உலக அரங் குகளில் எடுத்துக் கூறினார். இவரது அரும்பணி என்றும் பாராட்டிற் குரியது. திரு. அரியநாயகம் சந்திர நேரு அவர்களின் இனப் பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணி யைக் கௌரவிக் கும் முகமாக "மாமனிதர்'' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமைய டைகிறேன். உன்னத இலட்சியத் திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்க ளைச் சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு. புலிகளின் தாகம், தமிழீழத் தாயகம்

## மன்னார்...

மரணமடைந்துள்ளார்.

மன்னார் மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழவினர் ஸ்தலத்திற்கு வருகைதந்து தாக்கப்பட்ட சமாதான செயலகத்தைப் பார்வையிட்டு தகவல்களைப் பெற்றுக் கொண்டனர். சம்பவம் குறித்து மன்னார் பொலிசார் தெரிவிக்கையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று அறிக்கை வந்த பின்னரே இது பற்றித்தெரிவிக்க முடியும் எனக் கூறியுள்ளனர். காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் என்றும் இறந்தவர் பொதுமகன் எனவும் தெரியவந்ததாகக் கூறப்படுகிறது.

## கௌசல்யன்....

றுள்ளன என்றும் குறிப்பிட்டார். இன்றைய சந்திப்பில் குறிப்பிட்ட படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகவும், ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் தெரிவித்த் யசுசி அகாசி மேலும் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் உட்பட அனைத்துப் பிரதேசங்களுக்கும் நிவாரண உதவிகள், வசதிகள் உரிய முறையிலும், நியாயமான முறையிலும் வழங்கப் படுகின்றதா என்பது குறித்து தற்போது கவனம் செலுத்தி வருகின்றோம். கிழக்கு மாகாணத்தில் பாதிப்புக்களும் அதிகம். தேவைகளும் அதிகம் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் நிவாரணப் பணிகள் தொடர்பாக ஒரு இனக்கப்பாட்டை ஏற்படுத்தி ஏற்றுக் கொள்ளக்கூடிய நடைமுறையொன்றை உள்ளடக்கிய உடன் படிக்கையொன்றை கைச்சாத்திடுவது பற்றிக் கவனம் செலுத்தப் பட்டு வருகின்றது. தெற்கிலுள்ள மக்கள் கூறுகின்றார்கள் வடக்கு கிழக்கிற்குதான் நிவாரணம் செல்வதாக. ஆனால் கிழக்கு மக்கள் கூறுகின்றார்கள் தெற்கிற்கு நிவாரனம் செல்வதாக இதில் உண்மையில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பானிய அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு வங்கி, உலக வங்கி உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களும், உதவி வழங்கும் நாடுகளும் பாதிக்கப் பட்ட மக்களுக்கான தேவைகள் குறித்து மிகக் கவனமாக மதிப்பீடுகளை மேற்கொள்கின்றார்கள். இந்நிலையில் நிவாரணப் பணிக்கான நிதி உதவிகளை எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பது பற்றி அவர்கள் தீர்மானிப்பார்கள். நிச்சயம் கிழக்கின் தேவைகளும் கவனிக்கப்படும் என்றார்.

## குடாநாட்டில்....

கள் என எவையுமே திறந்திருக்கவில்லை அனைத்தின் முன்பாகவும் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தது. யாழ். பலாலிவீதி,யாழ்-பருத் தித்துறை வீதி மற்றும் யாழ்-கண்டி வீதி போன்ற பிரதான வீதிகள் உள்ளிட்ட பெரும்பாலான வீதிகள் போக்குவரத்திற்குத் தடைப்பட்டிருந்தது. பல இடங்களிலும் வீதிக்குக் குறுக்காகத் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. மின் கம்பங்கள் மற்றும் மரங்களென மிகக் குறுகிய தூர இடைவெளிகளில் இத் தடைகள் போடப்பட்டிருந்தன.

யாழ்பல்கலைக்கழகம்,தொழில்நுட்பக் கல்லூரி, தேசிய கல்வியற் கல்லூரி என்பனவற்றில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு வாழை மரங்கள் கட்டப்பட்டு சோக கீதம் இசைக்கவிடப்பட்டிருந்தது.

அதேவேளை, பரவலாக வீதிகளுக்குக் குறுக்காக ரயர்கள் போடப்பட்டு தீயிடப் பட்டிருந்ததால் பெரும்பாலான இடங்கள் ஒரே புகை மண்டலகமாகக் காணப் பட்டது.

பாதுகாப்பு நடவடிக்கையில் பெருமளவிலான படையினரும், பொலிசாரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். படை முகாம்களை அண்டிய சூழல்களிலும், முக்கிய சந்திப் பகுதிகளிலும் படையினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். பொலிஸ் வாகனங்களும், ரோந்தில் ஈடுபட்டிருந்தன. எனினும் இத் தடைகளையும் மீறி, வீதித் தடைகளைப் போடுவதில் இளைஞர்கள் முழு வீச்சில் முனைப்புடன் ஈடுபட்டிருந்தனர்.

வடமாரட்சியின் நெல்லியடிச் சந்திப் பகுதியில் வீதிகளை மறித்து போடப்பட்டிருந்த ரயர்களினை அகற்றுமாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோரிடம் அங்கு வந்திருந்த பொலிசார் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் அதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்திருந்த நிலையில், இரு தரப்பிற்குமிடையே முறுகல் நிலை தோன்றியிருந்தது. நிலைமையின் விபரீதத்தைப் புரிந்துகொண்டு சுதாகரித்துக் கொண்ட பொலிசார் சிறிது நேர இடைவெளியில் அங்கிருந்து வெளியேறி பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுவிட்டனர். இதையடுத்துப் பின்னர் நெல்லியடிச் சந்திக்கு வரும் நான்கு பிரதான வீதிகளையும் வழிமறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் முட்கம்பி வேலிகளை அமைத்தனர்.

அதேபோன்று யாழ். பருத்தித்துறை வீதியின் இருபாலைச் சந்திப் பகுதியில் போடப்பட்டிருந்த வீதித் தடைகளை அகற்று மாறு அங்கு வருகை தந்த படையினர் போராட்டக்காரர்களிடம் கோரிக்கை விடுத்தனர். எனினும், அதற்கு அவர்கள் மறுக்கவே ஆயுத முனையில் அவர்களை அச்சுறுத்திய பின் படையினர் அவ்வீதித் தடைகளை அப்புறப்படுத்தினர்.

நேற்று பருத்தித்துறை சிவன் கோவில் சந்தியில் பின்வரும் வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகள் காணப்பட்டன. அதில் "சிங்கள அரசே சமாதான காலத்தில் எமது உடன் பிறப்புக்கள் மீதான படுகொலைகளை உடன் நிறுத்து", ''அரசே தமிழ் மக்களின் பொறுமையைச் சீண்டாதே'', "நெருப்புடன் விளையாடாதே'', "உலக தேசமே படுகொலையை நிறுத்தச் சொல்", "இல்லையேல் மக்கள் புரட்சி வெடிக்கும'', ''சிங்கள தேசமே விழவிழ எழுவோம் ஒன்று விழ ஒன்பதாய் எழுவோம் இது தாண்டா தமிழன் வரலாறு விரைவில் புரிவாயடா'' என்றிருந்தது.

இதேவேளை,மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் நாட்டுப்பற்றாளர் அ. சந்திர நேரு ஆகியோர் வெலிக்கந்தப் பகுதி யில் வைத்துப் படுகொலை செய் யப்பட்டமையைக் கண்டித்து வவுனியாவில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணியும், நினைவஞ்சலி நிகழ்வும், மகஜர் கையளிப்பும் நடைபெற்றன.

நேற்றுக் காலை பத்து மணியளவில் கண்டி வீதியின் மகாவித்தியாலயத்திற்கு முன்னால் சிவநாதன் கிசோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் தலைமையிலும், மன்னார் வீதி குருமன் காட்டுச் சந்தியில் செல்வம் அடைக்கலநாதன் வினோ நோகராதலிங்கம் ஆகியோர் தலைமையிலும், பூந்தோட்டம் சந்தியில் சதாசிவம் கனகரட்னம் தலைமையிலும் ஆரம்பமான பேரணிகள் ஒன்றாக வவுனியா அரச செயலகத்திற்குச் சென்றன. பேரணியின் முன்பாக படுகொலை செய்யப்பட்ட லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளினதும், நாட்டுப் பற்றாளர் அ.சந்திரநேருவினதும் உருவப்படங்களைத் தாங்கி ஊர்திகள் நகர்ந்தன.

இதேவேளை, பேரணியில் கலந்து கொண்டவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் திருவுருவப்படங்களையும், கண்டனப் பாதகைகளையும் தாங்கிய வண்ணம், கண்டன வாசகங்களைக், கோசமிட்டவண்ணம் வந்தனர்.

இவ்வாறு செயலகம் சென்றடைந்த அவர்கள் இலங்கை சனாதிபதிக்கான மகஜரினை வவுனியா மாவட்ட அரச அதிபர் சின்னத்தம்பி சண்முகத்திடம் கையளித்தனர். இதன் பின்னர் பேரணியில் கலந்து கொண்ட அனைவரும் ஒன்றாக் கச்சேரியில் இருந்து வைரவப்புளியங் குளம் பகுதியில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்குச் சென்று கண்காணிப்புக் குழு தலைவருக்கான மகஜரினை வவுனியா போர்நிறுத்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர். இதனைத் தொடர்ந்து வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்திற்குச் சென்ற பேரணியானது அங்கு அகவணக்கம் செலுத்தப்பட்டதும் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் தலைவர் சதாசிவம் குலதேவராஜா தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. இதன் பின்னர் தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் செல்வி அலை ஏற்றினார். தொடர்ந்து வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன

நேற்று மேற்கொள்ளப்பட்ட இந்தக் ஹர்த்தால், கண்டனப் பேரணிகள் காரணமாக வவுனியா நகர் முற்றாகச் செயலிழந்து இருந்தது. அரச காரியாலயங்கள் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், எதுவும் இயங்கவில்லை வவுனியாவில் இருந்து போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை. எனினும் ஏ-9 சாலையின் ஊடாக வந்த வாகனங்கள் தமது போக்குவரத்தினை மேற்கொண்டன. ஆர்பாட்ட பேரணியில் ஈடுபட்டவர்கள் அசம்பாவிதத்தில் ஈடுபடக் கூடாது என்பதற்காக வவுனியா நகரில் பெருமளவான பொலிசார் குவிக்கப்பட்டுப் பாது காப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(10,21,27,33,41,45)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது